525

ஸ்ரீ

# செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு-௧௫] வைகாசி—ஆனி [பரல்-௧௧

## திருவாசகம்

### கோயிற்றிருப்பதிகம்

இரந்திரந் துருக வென்மனத் துள்ளே
வெழுகின்ற சோதியே யிமையோர்
சிரந்தனிற் பொலியுங் கமலச்சே வடியாய்
திருப்பெருந் துறையுறை சிவனே
நிரந்தவா காய நீர்நிலந் தீகா
லாயவை யல்லையா யாங்கே
கரந்ததோ ருருவே களித்தன னுன்னைக்
கண்ணுறக் கண்டுகொண் டின்றே.

பதவுரை :—

இமையோர் சிரந்தனில்—(தேவர்கள் நின்னுடைய திருவடிகளில் தங்கள் தலைகளைப் பொருந்தவைத்து வணங்குதலால்) தேவர்களுடைய தலைகளில்

பொலியும் கமலச் சேவடியாய்—மிளிர்ந்து விளங்குகின்ற தாமரை மலர்போலும் மெல்லிய இரண்டு செவ்விய திருவடிகளை உடையவனே

இரந்து இரந்து உருக—நான் எனது குறைவையும் அளவிலாச் சீருடைய நினது நிறைவையும் நோக்கி நின்னை அடைதல் வேண்டுமென்னுங் கருத்துடன் இடைவிடாது வேண்டுதல் பற்றி எனது மனம் அன்பினாலிளகி யுருகுதலால்

என் மனத்துள்ளே எழுகின்ற சோதியே—எனது மனதினுள்ளே விளங்கித் தோன்றுகிற பேரொளி வடிவே

திருப்பெருந்துறை உறை சிவனே—திருப்பெருந்துறையில் திருக்கோயில் கொண்டருளியிருக்கும் சிவபெருமானே

நிரந்த ஆகாயம் நீர் நிலம் தீ கால் ஆய்—எங்கும் பரந்துள்ள வெளி, காற்று, தீ, நீர், மண் ஆகிய ஐம்பெரும் பூதங்களுடன் அத்துவிதமாய்க் கலந்து அவையே யாகியும்

அவை அல்லையாய்—(அங்ஙனம் நீ ஐம்பூதங்களுடன் கலந்திருப்பினும்) அவற்றால் மாறுதலடையாது அவற்றைக் கடந்திருப்பவனாகியும்

ஆங்கே கரந்தது ஓர் உருவே—(அவ்வாறு நீ ஐம்பூதங்களோடு கலந்திருப்பினும்) உண்மை அன்பர்களுக்கன்றிப் பிறர் காணும்படி வெளிப்படத் தோன்றி நில்லாது அப்பூதங்களினுள்ளே மறைந்து கொண்டிருக்கும் ஒப்பற்ற ஒளிவடிவமே

இன்று—இன்றையநாள்

கண்ணுறக் கண்டு—(தில்லையில்) எனது அகக்கண்ணால் நினது பேரொளி (ஞானகாசம்) வடிவத்தைக் கண்டு

களித்தனன்—என்றும் மாறாத பேரின்ப மடைந்தேன்.

"அத்தனெனக் கருளியவாறார் பெறுவார்" என்பது குறிப்பெச்சம்.

## விளக்கவுரை :—

கமலச்சேவடி—தாமரை மலர்போலு மெல்லியசேவடி=தாமரை மலர்களணிந்திருக்கிற சேவடி என்றுரைப்பினும் பொருந்தும். செம்மை + அடி = சேவடி. உண்மை அன்பர்களுக்கு நேர்மையி லின்பமளிக்கும் திருவடிகள்.

இரந்து இரந்து உருக— இரத்தல் என்பது கீழோனொருவன்மேலோனொருவனிடம் தன் குறையைச் சொல்லி அக்குறையை நீக்க வேண்டுதல்.

அது இங்கே மாணிக்கவாசக அடிகள் சிவபெருமானிடம் தம்மை அவன் திருவடிகளிற் சேர்த்துக்கொள்ளல் வேண்டுமென்று வேண்டுதலைக் குறிக்கிறது. அங்ஙனம் வேண்டும்பொழுது அவர் மனம்அன்பினாலிளகி உருகுதலால் 'உருக' என்றார். உருக என்பது இங்கே காரணப்பொருளில் செய என்னும் வாய்பாட்டு இறந்த கால வினையெச்சமாய் வந்தது. அடிகள் சிவபெருமானிடம் வேண்டுதல் செய்ததை 'பிரார்த்தனைப் பத்து'ப் பாட்டுக்களிலும் 'உற்றாரை யான் வேண்டேன்' என்ற முதற்குறிப்புப் பாட்டு போன்ற சில பாட்டுக்களிலும் கூறியருளினமை காண்க.

என்மனத்துள்ளே எழுகின்ற சோதியே—சிவபெருமான் தமக்கு இடைவிடாது செய்துவரும் அருட்செயல்களை உணர்ந்து நினைந்து அவனிடத்தில்அன்புமீதூருந்தோறும் மனதினிடம் அருளொளி விளங்கி இன்பமுண்டாதலால் அடிகள் "என்மனத்

துள்ளே எழுகின்ற சோதியே'' என்றார். "அன்புறு சிந்தையின் மேலெழு மவ்வொளி--இன்புறு கண்ணி யொடேற இசைந்தன" என்று திருமந்திரம் 282-ஆவது பாட்டில் திருமூலர் கூறுதல் காண்க. மனம் என்பது இங்கே மலமாசு நீங்கிய மனம். மலமாசு ஒருபுடை நீங்கப்பெற்ற நம்போன்றவர்களும்தங்கள் மனதில் சிவ பெருமானுடைய திருவருளை அன்பால் நினைந்து உருகுவார்களா ஞல் அதன்கண் இன்பமுண்டாகிப் பெருகுதலை அநுபவத்தில் நாம் காணலாம்.

நிரந்த ஆகாயம் நீர் நிலம் தீ கால் ஆய்—நிரந்த என்பது எங்கும் பரந் திருக்கிற. இந்த அடைமொழி ஆகாயத்தைமட்டும் தழுவும். சிவபெருமான் வெளிமுதலிய ஐம்பூதங்களிலும் நிறைந்திருத்த லால் அவை தத்தமக்குரிய குணங்களை உடையனவாயுள்ளன.

அடிகள் போற்றித் திரு அகவலில்,

பாரிடைஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடைமூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை யிரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி

என்று கூறியிருத்தல் காண்க.

அவை அல்லையாய்—சிவபெருமான் ஐம்பூதங்களிலும் அத்துவித மாய்க் கலந்திருப்பினும் அவற்றிலடங்காது அவற்றைத் தன்னு ளடக்கிக் கடந்திருக்கின்றான் என்பார் அவை அல்லையாய் என் றார்.

ஆங்கே கரந்தது ஒருருவே—ஐம்பூதங்களும் தங்கள் காரியாவத்தை யில் காரிய உலகமாய்ப் பரிணமித்து நின்று காரணவத்தையில் சூக்குமமான சத்திவடிவில் சிவபெருமானுடைய அருட்பே ரொளியில் (ஞானகாசத்தில்) அடங்கியிருத்தலால் அடிகள் 'ஆங்கே கரந்ததோருருவே' என்றார். உருவு என்பது, ஒளி உருவு. சோதியாய்த் தோன்றும் உருவமே என்று அடிகள் கூறி யது நோக்குக. அந்த உருவம் உலகிற் காணப்படுமுருவம் போன்றின்மையின் அடிகள் ஒருருவே (ஒப்பற்ற உருவே) என் றார். கரந்தது—சூக்குமமாய்ச் சத்திவடிவில் மறைந்து விளங் கித் தோன்றாதிருப்பது.

இன்று—என்பது அடிகள் தில்லையிலிருந்த நாள்களில் ஒன்றைக் குறிக் கிறது. இந்தக் கோயிற்றிருப்பதிகத்தை அடிகள் தில்லையில் வைத்துப்பாடியதாகத் திருவாதவூர் புராணம் 406-ஆவது பாட் டில் கடவுள்மாமுனிவர் கூறுகின்றார். எ—அசை

கண்ணுறக்கண்டு களித்தனன்—கண் என்பது இங்கே அகக்கண்ணை அதாவது மெய்யுணர்வைக் குறிக்கிறது. கடவுள் மாமுனிவர் திரு வாதவூர்ப் புராணம் 414-ஆவது பாட்டில் அடிகள் 'தத்துவ முடிவி லாடுந் தாண்டவந் தம்முட்கண்டு சித்தலுஞ் சென்றிறைஞ்சி யன்

பால்' என்று கூறுதலை நோக்குக. கண்ணுறக் காணுதலாவது மெய்யுணர்வால் கூத்தப்பிரானை உள்ளத்திலுணர்தலாகும். களித்தல் என்பது அவ்வுணர்ச்சி காரணமாக உள்ளத்தில் பேரின்பம் (ஆநந்தம்) நுகருதல்.

இப் பாட்டில் கோயிற்றிருப்பதிகம் ஏனைய பாட்டுக்களிற்போல் "ஆங்கே கரந்ததோருருவே என்றதனால் அறிவும்" "இரந்திரந்துருக என்மனத்துள்ளே எழுகின்ற சோதியே" என்றதனால் அன்பும், "கண்ணுறக் கண்டுகளித்தனன்' என்றதனால் செயலும் தமதுள்ளத்தில் குறைவின்றி நிரம்பியதனால் பேரின்ப நுகர்ச்சி உண்டானதாக அடிகள் கூறுகின்றார். ஞான இச்சாக்கிரியா சத்திகளாகிய அறிவு அன்பு செயல்கள் மூன்றும் ஒருயிரினில் குறைவின்றி நிரம்புவதே பேரின்ப அநுபோக இலக்கணமாகும். இந்த மூன்று சத்திகளும் நிறைவது உயிர் சிவபெருமானோடு அத்துவிதமாய்க் கலந்து அவனுடைய ஞான இச்சாக்கிரியாசத்திகள் அதனிடம் பதிதலால் உண்டாகிறது. உலக போக நுகர்வை விரும்பி உலகில் வாழும் மக்களும் தங்களிடம் ஏக தேசமாய் விளங்குகிற இந்த ஞானஇச்சாக்கிரியா சத்திகளை நிகழ்த்தியே எத்தொழிலையும் செய்கிறார்கள். அவர்கள் திருவருளைத் தங்களுள்ளத்தி லறிந்துணரச்செய்யும் அறவழியில், தங்கள் ஞானஇச்சாக்கிரியா சத்திகளை நிகழ்த்தி ஒழுகுவார்களானால், அவ்வொழுக்கம் தங்களொழுக்கத்துக்குத் தக்கவாறு ஏகதேச இன்பத்தைப் பயப்பதல்லாமல் உலக நெறியிலிருந்து பேரின்பத்துக்கு ஏதுவாகிய மெய்யுணர்வைப் பயக்கும் வீட்டு நெறிக்குச்செல்லும் பக்குவத்தையு முண்டு பண்ணும். இக்காலத்து மக்கள் பெரும்பான்மையும் இவ்வுண்மையை அறியாது நிலையில்லாத பொருட்செல்வ முதலியவற்றால் மயங்கித் தீய நெறியிலொழுகித் தாங்களே தங்களுக்குக் கேட்டினைத் தேடிக்கொள்கிறார்கள். அந்தோ! இது என்ன பாவம்!!

—மா. வே. நெல்லையப்ப பிள்ளை.

---

சாலடியர்கள் (Chaldeans) பரம்பொருள் ஒருவர் உண்டென்றும், ஆக்கல், அளித்தல், அழித்தல் ஆகிய தொழில்களை அவரே செய்து வந்தனரென்றும் நம்பியிருந்தாலும் இந்துக்களையும், செமிட்டிக் (Semitic) வகுப்பினர்களையும் போன்று அப் பரம்பொருள் மும்மூர்த்திவடிவங்கொண்டவர் என்ற கொள்கையுடையவராயிருந்தார்கள்.

பினீஷியர்களோ பரம்பொருள் மானிட உருவினர் என்றே நம்பியிருந்தார்கள். அன்றியும், அவர் மும்மூர்த்தி வடிவினரென்றும் ஒவ்வொரு மூர்த்திக்கும் ஒவ்வொரு இறைவி உண்டென்றும் கூறிவந்தார்கள்.

S29

# “செந்தமிழ்ச் சிறப்பு”

[செஞ்சி கு. இராமசாமி பிள்ளை, அவர்கள்]

அமிழ்தினுமினிய நம் செந்தமிழ்க் கலையின் வரைந்த ஏடும் நாற்றமிகுமெனவும், தீண்டிய கையும் மணம் பெறுமென வும், கூறிய வாயும் தீஞ்சுவை பெறுமெனவும் கூறிப்போந் துள வாய்மைக் கிணங்க, படிக்காசுப் புலவர் வரைந்த தெள் ளிய திருமுறை ஏட்டினைப் பற்றிப் புகழும் ஓர் பெருந்தகை யாளர்

“மட்டாருந் தென்களந்தைப் படிக்காசன் உரைத்ததமிழ்
வரைந்த ஏட்டைப்
பட்டாலே சூழ்ந்தாலும் மூவுலகும் பரிமளிக்கும்
பரிந்தெப் போது
தொட்டாலும் கைமணக்கும் சொன்னாலும் வாய்மணக்கும்
தொய்ய சேற்றில்
நட்டாலும் தமிழ்ப் பயிராய் விளைந்திடுமே பாட்டினுறு
நளினந் தானே.

எனக் கூறினதை நோக்கின் நன்கு புலனாம். திருவாச கம் என்னும் செஞ்சொற் பொதிந்துள நூலினை நுண்ணிய கருத்துடன் வாசித்தவரே அதனினிமையைக் கண்டு களி பேருவகை கொண்டுளராவர். இதனாலன்றோ திருச்சிற்றம் பலமுடையார் அவ்வரிய நூலினைத் தாமே வரைந்தருளினர். தமிழின் பெருமைப்பாட்டினை நன்குணர்ந்த பிங்கல முனி வரும் “இனிமையும் நீர்மையும் தமிழெனலாகும்” எனப் புகழ்ந்துளார். எல்லா இனிமையைக் காட்டினும் நந்தமிழ் உயரிய இனிமை பெற்றுளதெனக் கோடலே ஏற்புடைத்தாம்.

தமிழ் மொழியின் சிறப்பினை எடுத்தோதப் புகுந்த பொய்யாமொழியார் “செவிக்குணவில்லாதபோழ்து சிறிது வயிற்றிற்கு மீயப்படும்” என்றார். செவிக்கு உணவாகிய கேள்வியில்லாதபோது அம்மொழியினைச் சிற்றுண்டியாக வயிற் றிற்கும் கொடுக்கப்படும் என்றமையின் தமிழின் சிறப்பு நன்கு புலனாகக் காணலாம்.

கடைச் சங்க காலத்துப் புலவர் (49) நாற்பத்தொன்ப தின்மரில் நம் சொக்கப் பெருமானும் ஓர் புலவரா யமர்ந்து விளங்கினரெனப்பல நூற்களின்மூலம் கண்டுளோம். எல்லாம் வல்ல முழு முதற் கடவுளாகிய கண்ணுதற் பெருமானே அழ கிய தமிழ் மொழியினைக் கைக்கொண்டாரெனின், அதன் சிறப்பு அறைதற் பாற்றோ? நமது அரிய தமிழ் நூற்களினைக் கண்ட மேனாட்டவரிற் பலர் மொழி பெயர்த்து வரைந்து சென்றனரன்றோ? தொன்மையு மினிமையும் பொருந்திய செந்தமிழ்க் கலையின் சீர்த்தியினை விளக்க அவஞானம் போக் கும் சிவஞான முனிவர் "தெய்வச்சுருதி தமிழ் ஒன்றே தீட் டும் பெருமைத்து" என அமுதாம்பிகைப் பிள்ளைத் தமிழில் இயம்பியுள்ளார். சங்கப்பலகையி லமர்ந்து மூவேந்தர்களால் நன்கு மதிக்கப்பெற்று வந்தவள் நம் தமிழ்த்தாயன்றோ! தன்னை இழித்துக் கூறிய சோழனைச் சிறிதும் பொருட்படுத் தாத கம்பன் "உன்னால் யான் வாழ்க்கைபெற்று உலவுகின் றேனென நினைந்தனைபோலும்! உன்னைக் கண்டோ அரிய தமி ழினை வரைந்தேன்? உன்னையல்லால் வேறு மன்னர் இல்லை கொல்லோ? என்னை விரைந்து ஏற்றுக்கொள்ளாத வேந்தரு முளரோ!" என இறுமாப்புடன் புகல ஏதுவாயிருந்ததெது வெனத் துருவிக்காணின் நம் செந்தமிழேயெனக் கூறலமையும்.

காளமேகப் புலவர் திருமலைராயன் அவையை அடுத்த போது தன்னை அவமதித்த அரசனது அரியாசனத்துக்குச் சரியாசனம் தரல் வேண்டுமென யாரை விழைந்து கோரி னர்! நம் செந்தமிழ் அன்னையையே யன்றோ?

எலும்பைப் பெண்ணுகும்படி பாடிய ஞானசம்பந்தர் மந் திரம் தமிழ்மொழி என்பதினை யாரே மறுக்க வல்லார்! கொண்டான் என்னும் குயவனை நக்கீரர் சாகவும் பிழைக்க வும் கூறிய மந்திரம் எது? அஃதும் நம் தண்டமிழே யன்றோ!

சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் முதலை வாயினின்றும் பிள்ளையை வரவழைத்த மந்திரமும் ஒண்டமிழேயாகும்.

ஔவை சேர, சோழ, பாண்டியராய மூவேந்தர்கட்கும் மூன்று பழங்களை நல்கப்பாடிய ஒரைந்தடிக் கலித்துறை மந் திரமும் நம் சீரிய தமிழே என அறைதற்கும் ஐயமுளதோ!

தமிழ்மொழி தொன்மையுடையதெனவும், பிறமொழி கள் பின்னே தோன்றின எனவும் அறிதற்குப் பல சான்றுகள் உள எனினும், ஈண்டு ஒன்றை இயம்புதும்.—நம் தமிழ்ச்

சொற்கள் பிற மொழியாளர்களால் கொண்டு செல்லப்பட்டு உலவும் பதங்களில் சிலவற்றை இவண் கூறுவாம்.

| தமிழ் | | இங்கிலீஷ் | தமிழ் | | கன்னடம் |
|---|---|---|---|---|---|
| ஒன்று | = | One. | ஏன் | = | ஏனு |
| எட்டு | = | Eight. | இங்கே | = | இல்லி |
| கொல் | = | Kill, Quell. | கேள் | = | கேளி |
| கவர் | = | Cover. | ஒன்று | = | ஒந்து |
| கரை | = | Cry. | இரண்டு | = | இரடு |
| வார்த்தை | = | Word. | எடுத்துக் கொண்டுவா | = | தக்கொண்டுபா |
| மன் | = | Man. | கூப்பிடு | = | கூ |
| நரம்பு | = | Nerve. | மனை | = | மனை |
| தின்னல் | = | Dinner. | மூன்று | = | மூறு |
| தையல் காரன் | = | Tailor. | நான்கு | = | நாக்கு |
| சிலேயேடு | = | Slate. | | | |

| தமிழ் | | இந்துஸ்தானி | தமிழ் | | தெலுங்கு |
|---|---|---|---|---|---|
| ஏகம் | = | ஏக் (ஒன்று) | கண் | = | கண்ணு (கன்னு) |
| சலி | = | சலாவ் (நட) | மூக்கு | = | முக்கு |
| கரு | = | கரோ (செய்) | இங்கே | = | இக்கடா |
| பரவா யில்லை | = | பரவாநை | எங்கே | = | எக்கடா |
| ந | = | நை (இல்லை) | செவி | = | செவ்வு |
| கர்மம் | = | காம் (வேலை) | பெண்சாதி | = | பெண்ட்ளா |
| வா | = | ஆவ் (வா) | அதனை | = | தானினி (தானினை) |

இஃதேபோல் பிற மொழிகளிலும் நம் சீரிய தமிழ் முதனிலைகள் சென்றிருப்பதை நோக்கின் மிகைப்படும்.

இன்னணம் பல்லாற்றானும் பாடு பெற்றிலங்கும் செந்தமிழ் மொழியின் நிலை இக்காலையில் வலிமை யற்றுளதெனக் கூற இடந்தந்து கிடத்தல் நமது பெருங் குற்றமேயாகும்.

பல்லோராலும் போற்றப்பட்டு வந்த ஓர் மாணிக்கம் (கல்) நாளடைவில் காப்பாரின்றி நிலத்தில் தோய்ந்து மாசடைந்து ஒளிகுன்றிக் கிடக்குங்கால் ஓர் அறிவுடையோன் அக்

கல்லருகு சென்று அதன் மிசை படிந்துள மாசைப் போக்க முற்படுவானானால் மாசு நீங்கி ஒளிதர ஆரம்பிக்கும். இச் செயலினைக் கண்ட மற்ற மக்கள் கூட்டத்தினரும் வியப் படைந்து அதன் பெருமையை யுணர்ந்து களிப்புறுவரன்றோ! அஃதேபோல் "பண்ணார் தமிழ்" எனவும் "சந்தமார் தமிழ்" எனவும் சமயாசாரிகளால் புகழப்பெற்ற தமிழ் மொழி பண்டை நாளில் முதன்மை பெற்று விளங்கியது. இடையே பிறமொழிகளாகிய மாசுகள் பதிந்து தமிழ் என்னும் மாணிக் கத்தின் தண்ணொளியினை மயக்க ஆரம்பித்தன; எனினும் அத்தமிழ் மொழியின் சிறப்பினை நன்கு உய்த்துணர்ந்த அறி ஞர்கள் பலர் அம்மாசுகளைப் போக்க முற்பட்டதனால் சிறிதே அம்மாசு நீங்கி ஒளிதரலாயின. எனினும், இன்னும் ஆண் டாண்டுக் கழகங்கள் நிறுவி மொழி வளர்ச்சிக்கு வேண்டிய துறைகளினை நன்குணர்ந்து முழு மனதுடன் சோர்வின்றி உழைப்போமாயின் நிச்சயமாக நமது செந்தமிழ் மொழி செழிப்புடன் துலங்கி எல்லா வுலகங்கட்கும் பேரொளி பயக் கும் என்பதற்கு ஐயமில்லை எனக்கொள்ளலே முடிபாகும்.

---

## மலைபு வினாக்கள்

1. ஆட்டுத்தலையும் பூனைவாலுஞ் சேர்ந்து என்னவாகும்? (ஆடு + பூனை = ஆனை).
2. பறவைகள் எல்லாவற்றிலும் நிறைமிகுந்த பறவை எது? (கருடன். கரு = 15 + டன் — பாரம்.)

---

## இருசொல்லலங்காரம்

1. அச்சுவண்டியோடுவதேன்?<br>மச்சானுறவாடுவதேன். } அக்காளையிட்டு.
2. அரிசிவண்டி யிலேறுவதேன்?<br>அசடருழைக்காதிருப்பதேன் } சாக்கிட்டு.
3. அழகிய வீடு இடிவதேன்?<br>அஸ்தம் உச்சமாவதேன்? } உத்திரஞ் சாய்ந்து.

—கா. சிவ. க.

533

# வரலாற்றுப்பகுதி: History & Biography

II

## வேமன்ன கவி

[கோவை திரு. சி. கு. நாராயணசாமி முதலியார் அவர்கள்]

இப்புலவர் பெருந்தகை கி. பி. பதினைந்தாம் நூற்றுண்டில் தமிழ்நாட்டை யடுத்துள்ள தெலுங்கு நாட்டில் யாவரும் பரவும் மேவருஞ் சிறப்புடனும், புகழ் பெருக்கவும் விளங்கியிருந்தனர். இவ்வுண்மை பல்வேறு ஆதாரங்களால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மகாகவி வேமன்னரின் முன்னோர்கள், நீண்ட காலமாகவே 'அத்தங்கி' 'கோண்ட வீடு' என்னும் ஊர்களில் சீரும் சிறப்புமாகவே வாழ்ந்துவந்தனர். நமது வேமன்னகவி, "ரெட்டிகள்" என்ற மரபைச் சார்ந்தவர். இம்மரபினர்க்கு, "ரெட்டி ராசாக்கள்" என்ற பட்டப் பெயர் ஆந்திர நாடுகளில் வழங்கப்படுகிறது. இம்மரபினரில் பலர், தெலுங்கு மொழியிலும், வடமொழியிலும் மாபெரும் வித்துவான்களாக விளங்கியிருந்தனர். இதற்கு, மகாகவி காளிதாசருடைய சில வடமொழி நாடகங்களுக்கு வேமன்ன கவியின் முன்னோர்களில் "காட்டைய வேமன்ன கவி" என்னும் பெயரினர் வரைந்த உரையும்; இக்காட்டைய வேமன்ன கவியின் மைத்துனர் "குமாரகிரி" என்பவர் வடமொழியில் எழுதிய "வசந்த ராஜ்யம்" என்ற பிரபந்தமும; மற்ருெரு உறவினராகிய "பெத்த கோமடி வேமாரெட்டி" என்பவர், அழகாக வரைந்த "சிருங்காரதீபிகை" என்ற உரையும், அமருக காவ்யத்திற்குச் செய்த உரையுமே போதிய சான்றும்.

வேமன்ன கவியின் காலத்திற்குச் சிறிதுமுன்னர் பெருங்கீர்த்தியுடன் தெலுங்கு நாட்டில் விளங்கியிருந்த "திக்கன்ன சோமயாஜி" என்னும் புலவர் திலகரால், தெலுங்கு மொழிக்கும், புலமைக்கும், அத்துவித தத்துவத்திற்கும் மிகுதியான பெருமையும் புகழும் உண்டாயிருந்தன. வேமன்னரால் பாடப்பெற்றதும், அரிய நீதிகள் நிரம்பியதுமான இனிய பத்தியங்களில், (பத்தியம் தெலுங்கு மொழியில் ஒருவகைச் சந்தத்தால் இயன்ற செய்யுள்) ஸ்ரீ சங்கராசாரிய சுவாமி

களுடைய அத்துவித வேதாந்தப் பொருள்கள், மிகுதியாக இடம் பெற்றுள்ளன.

வேமன்ன கவி தமது இளமைக் காலத்தில் தமது பிறப்பகமாகிய தெலுங்கு நாட்டினின்றும் யாத்திரையாகப் புறப்பட்டுப் பல விடங்களைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு இனிமை மிகும் தமிழ் பெருகிய நமது தமிழ் நாட்டை யடைந்து அப்பொழுது தமிழ் கற்றுத் தேர்ந்த புலவராகவும், வேதாந்த தத்துவ விசாரத்தில் வித்தகராகவும், அநுபவ ஞானிகளாகவும் விளங்கியிருந்த ஆன்றோர்களிடத்தில் அன்புகொண்டு உறவாடி தமிழின் அளப்பரிய ஆற்றல்களை இனிதுணர்ந்து மிக மகிழ்ந்து, அவர்கள்தம் வாய் மூலமாகவே அத்துவித சித்தாந்தப் பொருள்களையும், வேதாந்தத் தெளிபொருள்களையும்,யோக நுட்பங்களையும் நன்றாகக் கேட்டு மனதுள் பதித்துக் கொண்டு அவர்கள்பால் விடை பெற்றுத் தமது பிறப்பகம் சேர்ந்து தாம் கேட்டறிந்த அரும்பெரும் ஞான நூற் கருத்துக்களையும்,அநுபவ நுட்பங்களையும் தம் பெயரால் தெலுங்கு மொழியிற் பாடிய "வேமன்ன பத்தியம்" என்ற அரிய இனிய நூலில் அழகுபெற விசைத்துத் திறமை விளங்கப் பாடியிருக்கின்றனர். இவ்வுண்மை அவ்வேமன்னகவி பாடிய "வேமன்ன பத்தியம்" என்ற நூலை ஆராய்ந்து கற்பார்க்குத் தெற்றெனப் புலப்படும். அத்தெலுங்குப் பத்தியங்களை அம்மொழியில் வல்லாரும் தமிழ்ப் புலவருமாகிய ஒருவர் தமிழில் வெண்பாவில் மொழிபெயர்த்திருக்கின்றனர். அதினின்றும் மாதிரிக்காக இரண்டு வெண்பாக்களை இதன்கீழ்த் தந்திருக்கின்றோம். அவை :—

### தேகம் அழியுமன்றி ஆன்மா அழியாது

"வானிடத்தே வானடையும் மண்ணிடத்தே மண்ணடையும்
ஊனெடுத்த ஆவி ஒழியுங்கால்—தேனடுத்த
சொல்லாய்நீர் தீவளிதாம் தோயமொடு தீவளியிற்
செல்லும்உயிர் நிற்கும் தனி." (18)

### சத்தியமும் ஞானமுமே மேலோர்க்கு லட்சணம்

"வாய்மையுள்ளார் பாலாய் வளரும் பிறங்கறிவு
தூயவறி வுள்ளார்பாற் றோன்றிடுமே—வாய்மையது
வாய்மையும் சீரார் மனத்தறிவும் உள்ளாரே
ஆய்வுறுமேன் மக்கள் அறி." (19)

என்பன.

தெலுங்கு மொழியில் சிறந்த புலமை வாய்ந்த புலவர்களது வமிச பரம்பரையில் தோன்றிய வேமன்னகவி, அத்துவித நூல்களில் அறிவு சிறந்த பரம ஞானியாகவும், தேச யாத்திரையினல் விசாலமான அநுபவ ஞானம் பெற்ற வேதாந்தியாகவும், சிறந்த கவியாகவும் பெயர்சிறந்து விளங்கினர். இத்தகைய சிறப்புமிக்க புலவராக விளங்கிய வேமன்னரது தெலுங்கு வேமன்ன பத்தியங்கள், ஆந்திரமொழி வரலாற்றில் உயரிய இருக்கையைப் பெருமலிருப்பது பெரிதும் வருந்தக்கூடியதேயாம். எனினும், இவரது தெலுங்கு பத்தியங்களின் அருமைப்பாட்டிற்கும்; அவற்றுள்ளடங்கிய இனிய கருத்துக்களுக்கும்; நீதி சாரங்களுக்குப்; ஞானக்குவியல்களுக்கும் ஆந்திர நாட்டு வேதாந்த சித்தாந்திகளும், ஞானசீலர்களும், பெரிய மதிப்பு வைத்து வியந்து பாராட்டி ஓதி யின்புற்று வருவது நமக்கு மகிழ்ச்சியை விளைவிக்கின்றது.

ஆந்திர பாஷையில் பேரும், புலமையும் சிறந்த "ஸ்ரீ நாத கவி"க்கும்; விஜயநகர சாம்ராஜ்யப் பேரரசர் "ஸ்ரீ கிருஷ்ண தேவராய"ருக்கும் இடைக்காலத்தில் புவி மதிக்கவும் புகழ் பெருகவும் விளங்கிய இவ்வேமன்ன கவி, வேதாந்தமும், தத்துவமும் நிரம்பிய பத்தியகவி பாடுவதில் மிகவும் வல்லாரெனப் பெயர் சிறந்திருந்தனர். இம் மகாகவி வேமன்னருக்கு முன்னிருந்த ஆந்திர கவிப் புலவர்கள் பலரும் சமஸ்கிருத நூல்களையே ஆதாரமாகக்கொண்டு "பாஷாந்திர கரிணியம்" செய்து வந்தனர். பாஷாந்திர கரிணியம் என்பதற்கு ஒரு மொழியிலுள்ள விஷயங்களை மற்ருெரு மொழியில் மொழிபெயர்த்து இயற்றுதல் என்பது பொருள். இம்முறை அக்காலத்திலிருந்த தெலுங்கு மொழிப் புலவர்கட்கு இன்பமாகவும், பொழுது போக்காகவும் இருந்தனபோலும். அவர்கள் தமது சொந்த நாட்டு மொழியும், தாய்ப் பாஷையுமாகிய தெலுங்கில் சுதந்திரமாகவும் கற்பனையுடனும் நூல்களை இயற்றுதல் சிறப்பென்பதை உணராமல், பிற மொழியினின்றும் மொழி பெயர்த்து நூல் இயற்றுதல் சிறப்பென்று கொண்டனர். தாய்ப்பாஷையாகிய தெலுங்கிற்கு இருந்த இக்குறையை விஜய நகர மன்னரும், வடமொழி தெலுங்கு ஆகிய இருமொழிகளிலும் வல்லவருமாகிய ஸ்ரீ கிருஷ்ணதேவராயரும்; அவரது சமகாலத்தில் பெரும்புலவராக விளங்கிய "பெத்தன்ன கவி"யும்; வேறு சில சில புலவர்களுமே சிறிது சிறிதாக நீக்க முயன்றனர். செல்வாக்கும், தகுதியும், அதிகாரமும் வாய்ந்த அரசர் ஸ்ரீ கிருஷ்ண தேவராயரும், பெரும்புலமையுடைய பெத்தன்ன கவியும், வேறு சிலரும் இவ்வழியைக் கைக்கொள்ளு

முன்னரேயே நமது வேமன்ன கவி இனிமையும், சரளமுமான அருங் கவிகளை உதய சூரியனைப்போல் பிரகாசிக்கும்படி இயற்றி யருளினர்.

இக்கவித் தொகுதிகளைக் கண்ட பின்னரேயே ஸ்ரீ கிருஷ்ணதேவராயரும், பெத்தன்ன கவியும், மற்றும் புலவர் களும் அவ்வழியைப் பின்பற்றி சமஸ்கரிணீயமான நியமத்தில் அதாவது கொள்கைகளை மாற்றாமல் அக்கொள்கைக் கேற்ப சிறந்த அறிவு நூல்களை இயற்றத் தொடங்கினர். வேமன்னர் மேற் கூறியவர்களைவிட ஒரு அடி முன்னேறி, கொள்கைகளை விட பாவனையே பதினாயிர மடங்கு உயர்வு என்று கருதி வேதாந்தக் கருத்துக்களும், நீதி மார்க்கங்களும் நிரம்பிய பத்திய ரூபமான இனிய பாசுரங்களை இயற்றத் தொடங்கினர்.

வேமன்ன கவியிடத்தில் இன்னுமொரு விசேடம். அது, வடமொழியில் அறிவுடையவர்களுக்கும், தெலுங்கு பாடையில் பயிற்சியுடையவர்களுக்கும் பிடித்தமாகவும், கால சந்தர்ப்பத்திற்கேற்பவும்,இனிய சொற்சந்தங்களில் செய்யுளோசை குன்றாமல் எளிய நடையில் சிறு சிறு பிரபந்தங்களைத் தாய்மொழியில் தகுதிபெற இயற்றுதலென்பது. அந்நூல் களில் முதன்மையாக மிளிர்ந்து காண்பன, நீதித்திரள்களும்; வேதாந்த தத்துவச் செய்திகளுமாம். அம்மட்டோ! அம் மகாகவி அங்ஙனம் இயற்றிய நூல்களில் பொருள் நுணுக்கத்தையும், பிற செய்திகளையும் இடமறிந்து எழில் பெறப் பொருத்துதலைக் கவனமாகக் கொண்டிருந்தனர்.

இக்கவீச்சுரர் தமது வாழ்நாளின் பெரும்பாகத்தை, ஞான மார்க்கங்களும் வேதாந்த சித்தாந்த தத்துவங்களும், முத்திநெறிக் குரியவைகளுமே நிரம்பிய இனிய பத்தியங்களை இயற்றுவதிலேயே செலவழித்தனரன்றி, சாமான்யர்க்கு உதவியாயிருக்கவும், அறிவு வளர்ச்சிபெற்று இன்பம் எய்தவும் ஏற்றதான இனிய பிரபந்தங்கள், துதி நூல்கள், புராணங்கள், இலக்கியஞ் செறிந்த காவ்யங்கள், வருணனையும் வளப்பும் வாய்ந்த நாடகங்கள் முதலியவற்றை இயற்றினாரில்லை. இக் குறையை முன்னிட்டுக் கல்வி யறிவுடைய ஆந்திர மக்கள் பல்லோர் இவரிடத்தில் அன்புகொள்ளாமலும், ஆதரணை செய்யாமலும் இருந்துவிட்டனர். ஆயின், வேதாந்தத்தில் விருப்பமுடையவர்களும், ஞான மார்க்கங்களை அறிவதில் அவாவுடையவர்களும், துறவறத்தில் நாட்டங்கொண்டவர்களுமே வேமன்னரைப் பெரிதும் விரும்பி அபிமானம் வைத்து ஆதரித்து வந்தனர். இத்தகையோர் தொகை மிகவும் சுருங்கி

யிருந்ததனுல், வேமன்னரது புலமைத் திறனும், அவரது உயர்ந்த ஞானநெறியும், தியானுநுபூதி முறையும், பிறவும் பெருமைப்பட விளங்குதற்கின்றியும்; மதிப்பும், புகழும் மேலோங்கிப் பிரகாசிக்கவும் வழியில்லாமற் போயின. இவற்ருல், ஆந்திர நாட்டிற்கே ஒரு குறைவுண்டானதோடு, அந்நாடு, ஞானசாத்திரங்களிலும், வேதாந்த தத்துவங்களிலும், சித்தாந்த நுணுக்கங்களிலும், பிரம்மத்தைக் கண்டறியும் யோக சாதனங்களிலும் அறிவும், அநுபவமும், ஆற்றலும் வாய்ந்த பெரியாரது மனக்குகையுள் நிரம்பி வழிந்துகொண்டிருந்த இதா ரகசிய நுட்பங்களையும், உயரிய தத்துவங்களையும் அடைய முடியாமல் போனது.

வேதாந்த வித்தகரும், சித்தாந்த சீலரும், தத்துவ ஞானியுமாகிய இவ்வேமன்னர் சாமான்யரல்லர். வடமொழியிலும், தெலுங்கிலும் பேரறிவும் பெரும் புலமையும் படைத்தவர். அம்மட்டோ! ஆன்ற ஒழுக்கத்திலும், சான்ருண்மையிலும் மிக்குயர்ந்து தியானுநுபூதி, யோகா சாதனங்களில் சித்தி வாய்ந்து, இயற்கைக் கவியாகவும், ஏந்து புகழ் வாய்ந்து யாவரும் பரவும மேவரும் சிறப்புடைய புலவர் பெருமானுகவும் இலங்கினர். இப்பெரியார் இயற்றியருளிய "வேமன்ன பத்தியம்" சுமார் மூவாயிரம் தொகையுடையது. இப்பொழுதும் சீர்மை மிகும் அப்பத்தியங்கள், தெலுங்கு நாடுகளில் அந்நாட்டு மொழிப் பயிற்சியுடைய ஒவ்வொரு ஆந்திரனுலும், அருமை பெறப் பாராட்டி இனிமையுறப் பாடப்பட்டு வருகின்றன. நீதிக்கும், ஞான நெறிக்கும் நல்வழிகாட்டியாக விளங்கும் ஸ்ரீ பெத்தன்ன கவியின் "சுமதிசதகத்தை"ப் போலவே வேமன்னரது பத்தியங்களும் ஆந்திர நாட்டில் அதிகமாக ஓதப்பெற்று வருகின்றன. இவ்வளவே இப்பெரியாரைப் பற்றி நாம் அறிந்தவை.

---


# திருவள்ளுவர் நினைவுமலர் (1935)

அழகிற் சிறந்தது; படங்கள் நிறைந்தது;

பொருள்வள மிகுந்தது.

எம்மிடம் கிடைக்கும்.　　　　குறைந்த விலை அணு 9.

S38

# இலக்கணமும் இலக்கியமும்:

## LANGUAGE AND LITERATURE

### திருக்குறள்

[சேலம் செவ்வாய்ப்பேட்டை செந்தமிழ்க் கழகத் தலைவர் ஐயா.பா.வே பொன்னுசாமி நாயக்கர் எழுதியது]

1. திருக்குறள் தொல்காப்பியத்தை இலக்கணமாகக் கொண்டு சங்க நூல்களுக்கும் மற்றைய நூல்களுக்கும் முந்தி எழுந்ததாகும். "எழுத்தெனப்படுப அகரமுத னகர இறுவாய் முப்பஃதென்ப" என்றதற்கு இணங்க முதற்குறள் அகரத்திற் றொடங்கி கடைசிக்குறள் னகர ஒற்றில் முடிகிறது. இந்நூலில் சற்றேறக்குறைய 12000 சொற்கள் உள்ளன. அவற்றுள் சுமார் நூற்றுக்கு எழுபது உயிரெழுத்துக்களாலாய சொற்கள். ஆகவே உயிர் அதிகரித்து இருத்தலானும் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்த் திருத்தலானும் இந்த நூற்கு என்றும் அழிவு வாராதென்பது தேற்றம்.

2. வற்புறுத்த ஓர் பொருளை வள்ளுவனார் பத்து முறை சொற்பொருத்தி ஓதும் துணிவுக்கு இணங்க உலகவழக்கிலும் ஒரு தடவைக்குப் பத்துத்தடவை சொன்னேன் கேட்கவில்லை என்கிறார்கள். திருமாலுக்குக் காது பவம் பத்தென்பர். இந் நூல் ஒவ்வோர் அதிகாரமும் பத்து அழியாப் பவம் பெற் றிருக்கிறது.

3. கடவுள் மக்கட்குத் தோன்றாத்துணை, கல்வி தோன் றுந் துணை; ஆதலின் கல்வியைக் கடவுள் என்பதில் ஐயமில்லை. இதுபற்றியே குமரகுருபரரும் "கல்வியி னூங்கில்லை சிற்றுயிர்க் குற்ற துணை." என்றார். பொருட்செல்வத்தைக்காட்டிலும் கல் விச் செல்வம்மேலென்பதற்கு வைப்புழிக் கோட்படா வாய்த் தீயிற் கேடில்லை முதலிய காரணங்களைவிட, மற்றைய செல்வங் கள் மன்பதைக்குப் புறம்பே இருந்து அழிவன, கல்விச் செல்வமோ அகததே இருந்து அழியாது நிற்பது. பொருட் செல்வம் இல்லாக் கற்றோரை இழித்துக் கூறும் அழிபொருட் செல்வர்களால் உடைக்கமுடியாக் காரணம் மேற்சொன்ன தாகும். கல்விக்கடல் முழுதும் இந்நூலில் அடங்கினமையால் இதைத் தெய்வமென்றும் தெய்வநூல் என்றும் சொல்ல ஐய மென்னை?

4. 40-ம்-அதி. கல்வி: கல்+வி=கல்வி. கல்=கிண்ட, தோண்ட (வருவது); வி=கண், அறிவு. 2-ஆவது குறளில் கண் ணையும், 6-ஆவது குறளில் அறிவையும் குறிக்கிறார்.

5. மற்றைய கனிகளினும் முதிர்ச்சிபெற்ற முக்கனி போல் மற்றைய நூல்களினும் முதிர்ச்சிபெற்று முப்பாலால் மிளிரும் இந்நூலை வேதத்துக்குச் சமானமானதென்று சிலர் கூறுவர். நான்மறைகளில் எந்தமறைக்கென்று தெரியவில்லை. விபசாரத்திற்குக் கழுவாய் (பிராயச்சித்தம்) சொல்லும் உருக்கு வேதத்திற்கா? "தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்;" மற்றையார் பெண் ஆகார் என்னும் இந்நூலுக்குச் சமானமான வேறு நூல் எம்மொழியினும் உண்டோ? இல்லை. இதற்கே ஏனைய வேதங்களினும் உயர்ந்ததெனப் பெயர்பெற்ற உத்தரவேதமென்றும், பொய்யா மொழி, தமிழ்மறை, பொதுமறை என்றும் பெயர்கள் உண்டன்றோ? ஆசிரியர் 1-ம் அதி கடவுள் வாழ்த்து முதற் குறளில் ஆண்டிருக்கும் "பகவன்" என்ற சொல்லிற்குப் பொருள் பொதுமையில் கடவுள் என்றும் சிறப்பு வகையில் அரன், அரி, அருகன், புத்தன், என்றும் இருக்கிறது. எண்குணத்தான், அறவாழி அந்தணன், பொறிவாயிலைந்தவித்தான், வாலறிவன் முதலிய சொற்றொடர்களும் குறித்திருக்கிறார். இதனால் இவர் அகப்புறச் சமயங்கட்கும் இனித் தோன்றும் புதிய சமயங்கட்கும் பொதுவுற அச்சமயக் கணக்கர் மதிவழி கூறாது உலகியல் கூறிப்பொருள் இது என்றவர். மக்கட்பிறப்பினர் எப்பாலவர்க்கும் எக்கோட்பாடுடையார்க்கும் உய்யும் வழி பொதுமையிற் சொல்லிப்போவதால் ஆரியர் தமக்கென்றும் மறைத்துக்கொண்ட மறைபோலாது எவர்க்கும் இவர் நூல் "பொதுமறை" என்று பெயர்பெற்றது சாலப்பொருந்தும். இனி "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே" என்ற சூத்திரம் வேண்டாதாயிற்று.

6. கைகாணா மந்திரம் கண்ணுதலோன் கூற்று (ஆரிய மந்திரம்), கைகண்ட மந்திரமே தேவர் பாடலாதலின் மக்களாவார் அனைவரும் ஆசிரியரையும்அவர் நூலையும் கடவுளாகக் கொண்டு நாடோறும் வழிபட்டுப் பாராயணஞ்செய்து உய்தல் வேண்டுமென்பது எனது வேண்டுகோள். இவர்க்குச் சிறப்பொடு பூசனையும் என்றும் நடைபெறுதலும் வேண்டும்.

---

# குறுந்தொகை

## மூலமும் விளக்க உரையும்

[இலந்தையடிகள் வித்துவான் இரா. சிவ. சாம்பசிவன்]

(பதிப்புரிமை ஆசிரியர்க்கே)

## குறிஞ்சி

பிரிந்துசென்ற தலைவன், செல்லுங்கால் "விரைந்துவந்து வரைந்து கொள்வன்" எனக்கூறிச் சென்று தன் சூளுறவுபொய்க்க வந்திலனாதலின், தலைவனது பிரிவு நீட்டித்தகாலைத் தலைவி புலர்ந்து தோழிக்குக் கூறியது.

கபிலர் பாடியது

25. யாரு மில்லைத் தானே கள்வன்
தானது பொய்ப்பின் யானெவன் செய்கோ?
தினைத்தா ளன்ன சிறுபசுங் கால
ஒழுகுநீ ராரல் பார்க்குங்
குருகு முண்டுதா மணந்த ஞான்றே.

என்பது வரைவு நீட்டித்தவிடத்துத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

பதவுரை:—

யாரும் இல்லை தானே கள்வன்—தலைமகன் என்னுடன் கள்வனைப்போல் வந்து கூடிச் சென்றகாலை அதனையுணர்ந் தார் அங்குப் பிறர் எவருமில்லை; (அவன் ஒருவனும், யான் ஒருத்தியுமே யாவோம்); தான் அது பொய்ப்பின் யான் எவன் செய்கோ—அத்தகைய அவன்தான் சூளுற்றதினைப் பொய்ப்பானாயின் யான் செய்யத்தக்கது என்? (ஒன்றுமில்லை. நெஞ்சழிதலே) தினைத்தாள் அன்ன—தினையினது தாளைப் போன்ற, சிறு பசும் கால—சிறிய பசிய கால்களையுடைய, ஒழுகுநீர் ஆரல் பார்க்கும்—இடையறாது ஓடிக்கொண்டிருக் கும் அருவி நீரில் ஆரல் மீனை உணவாக்கிக்கொள்ளக் கரு திப் பார்த்துக்கொண்டிருக்கும், குருகும்—நாரையும், தாம் மணந்த ஞான்று—தலைவர் தாம் என்னைத் தனித்துக் கூடிய நாளில், உண்டு—இருந்தது. தாம்,ஏ—அசை.

"விரைந்து வந்து வரைந்துகொள்வேன்" என்று சூளுற்றுச் சென்றதலைவன் தான் பொய்ப்பானாயின் யான் செய்யத்தக்கது என்னோ?" என்று தலைவி வருந்திக் கூறியது.

நாரையின் காலிற்குத் தினைத்தாள் உவமை கூறப்பட்டது. கால என்பது குருகு என்பதைத் தழுவும். கால் + அ. அ-ஆறும் வேற்றுமைப் பன்மையுருபு. ஒழுகுநீர் - வினைத்தொகை. ஆரல் - ஆரல் மீன். "தினைத்தா ளன்ன சிறுபசுங்கால ஒழுகு நீராரல் பார்க்கும் குருகு முண்டு" என்றது "யாருமில்லை" என்று கூறிய தலைவி 'குருகுமுண்டு' என்று கூறியதனால், குருகு இரைதேடும் கருத்தோடு இருந்தமையின் தானும் தலைவனும் கூடியிருந்தமையை அது அறியாதிருக்கக்கூடும்; அது அறிந்திருக்குமாயின், இயல்பாகப் பிறவுயிர்க்குத் தீங்கிழைக்கும் அக்குருகு தனக்குக் கரியாதற்கு வாராதிருத்தலும் கூடும் என்பது கருதிக் 'குருகும்' என இழிவு சிறப்பும்மை கொடுத்தார்.

மேற்கோள் விளக்கம்:—

1. "தினைத்தா ளன்ன சிறுபசுங் கால
ஒழுகுநீ ராரல் பார்க்குங்
குருகு முண்டுதா மணந்த ஞான்றே

—என்புழிச் சிறுபசுங்கால" என்று பன்மையாற் கூறிப் பின்னைக் 'குருகுமுண்டு' என்று ஒருமையாற் கூறுதல் வழுவாயிற்று; ஆயினு மமைக என்பது."

—(தொல். சொல். இளம். பக். 260)

2. "தினைத்தாளன்ன ........ஞான்றே"—

"உண்டு என்பதனையும்......பொதுவினையாகக் கொள்ளாது, அஃறிணை ஒருமையாகக்கொண்டு, "தினைத்தா......ஞான்றே" என்றற்றொடக்கத்தனவற்றைப் பன்மை ஒருமைப்பால் வழுவமைப்பாகக் கொள்ளின் முடியாவென்க" —(நன். மயிலை பக். 213)

3. "உண்டென்பது அஃறிணை யொருமைக்கே யன்றிப் பொது வினையாதல் புதியன புகுதலாம் என்பார் பிற்கூறினர். (உ-ம்) "யாருமில்லை ........ஞான்றே" —(நன். சங்கர பக். 176)

4. தலைவன், வரைவிடைவைத்துப் பிரிந்த காலத்து வருந்திய தலைவி, தோழிக்கு அவள் வினவாக் காலத்துக் கூறியதற்கு மேற்கோள்—"யாருமில்லை......ஞான்றே"

இவற்றுள், துறந்தான் போலவும் மறந்தான் போலவும், கருதித் தான் தீது மொழியினுமெனவும், யாமெனவன் செய்கோ எனவும் தோழி வினவாக்காலத்து அவன் தவற்றை வரைவிடைவைத்தலின் ஆற்றாமைக்கு (தலைவி) அறிவித்தாள்"—(தொல். களவு. பக். 479)

5. இச்செய்யுளைத் "தலைமகன் இகந்தமை தலைவி பாங்கிக்கு இயம்புதல்" என்னும் துறைக்கு உதாரணமாக்குவர். (நம்பியகப்—சங்கப்)

6. 'காலகுருகு' என்பதை 'உவவினநாண்மதி' என்றதற்கு உதாரணமாக்குவர் பேராசிரியர். "காலகுருகு என்பது போலப் பன்மை ஒருமை மயக்கம்" —(திருக்கோவையுரை—பேராசிரியர் 108)

7. "கள்ளகத்த கழுநீர்மலர்" என்பது 'காலகுருகு' என்பதுபோல நின்றது; பெயரெச்சமெனினுமமையும்"

—(திருக்கோவையுரை—பேராசிரியர் 123)

திருக்கோவையார் உரையில் ஈரிடங்களில் காலகுருகு என்பது முறையே 'உவவினநாண்மதி,' என்பதற்கும், 'கள்ளகத்த கழுநீர்மலர்' என்பதற்கும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. பேராசிரியர்; முதலில் எடுத்துக் காட்டிப் 'பன்மை ஒருமை மயக்கம்' என்றும், பின். இரண்டாவதாகப் 'பெயரெச்சமெனினுமமையும்' என்றும் கூறுவர். முற் கூறியதே பொருந்தும் எனத் தொல்காப்பியச் சொல்லதிகாரத்திய இளம் பூரண ருரையால் (மேற்கோள் 1) விளங்கும்.

திருக்கோவையாரில் 'காலகுருகு' என்பதை யுதாரணங்காட்டிய ஈரிடங்களிலும் இத்தொடர் குறுந்தொகைச் செய்யுள் 26 என்று உடுக்குறியிட்டுக் குறித்திருத்தல் காண்க. இத்தொடர் குறுந் தொகையில் 25-ஆவது செய்யுளிலுள்ளமையின் அஃது அச்சுப்பிழை போலும்.

தொல்காப்பியம் களவியல் 109 சூத்திரவுரையில் "அவன் புணர் வுமறுத்தற்கு" இச்செய்யுளை மேற்கோளாகக் காட்டினர்.

—(தோல். களவு. இளம்பூ. பக். 179)

'யாருமில்லைதானே கள்வன் ...ஞான்றே' என்புழிக் குருகென்பது இயற் பெயராகலின் அதன்கட் பன்மையொடு காலவென்பது இயைந்து, காலனவாகிய குருகுகளென நின்று, அஃது உண்டென் னும் பொதுவினை கொண்டதென்ருற்படும் இழுக்கின்றேனும், கள் வன் தான் ஒருவனுமே வேறு சிலர் ஆண்டில்லையென்று கூறுகின் ருள், இரைதேரும் மனக்குறிப்புடைமையிற் கேளாது, சிறிது கேட்ட தாயினுங் கொலைசூழ் குருகாதலிற் கூறுவதுஞ் செய்யாது, இத்தன் மைத்தாய தொரு குருகும் உண்டென்று கூறுதலிற் காலகுரு கென் பதனைப் பன்மை யொருமை வழுவமைப் பென்றே கொள்ள வேண் டுதலான் உண்டென்பது ஆண்டு அஃறிணை ஒருமையுணர்த்தி நின்ற தல்லது யாண்டும் அஃறிணையொருமையே உணர்த்தி நிற்குமெனக் கூறவேண்டுவதில்லை" —(இலக்கண விளக்கம் பக். 214)

"குருகு கருங்கால் வெண்குருகொன்ற கேண்மதி."

—(இலக்கண விளக்கம் பக் 185)

"கருங்கால வெண்குருகுங் கண்டல்வாய்விட வஞ்சுங் கொண் டல்" —(இலக்கண விளக்கம் பக். 462)

543



1. "யாருமில்லைத் தானே கள்வன்"

(i) யாருமில்லை தானே கள்வன்—பிரதிபேதம்

(ii) யாருமில்லைத் தானே கணவன்—பிரதிபேதம்

2. 'தானது பொய்ப்பின்'—"தானவன் பொய்ப்பின்"—பிரதிபேதம்.

3. 'சிறுபசுங்கால'—'சிறுபசுங்காஅல—பிரதிபேதம்.

மேற்கோள் விளக்கம் :—

"கால......வெண்குருகு"

(அ) "கருங்கால் வெண்குருகு" —(யாப்பருங். பக். 160)

(ஆ) "மீன்தேர்ந்து வருந்திய கருங்கால் வெண்குருகு"

—(யாப்பருங். பக். 193)

(இ) "கழனிக் கருங்கால் வெண்குருகு" —(நற்றிணை. 4)

(ஈ) "தினைத்தாளன்ன செங்காலுரை"

—(சுந்தரர்: திருவாரூர் 6)

யாரும்—உம்மை—முற்றும்மை. இல்லை—பொதுவினை.

தானே—ஏகாரம் பிரிநிலை.

கள்வன் என்றது மனத்தொன்றும் மொழியில் ஒன்றுமாயது கருதி.

மெய்ப்பாடு—அச்சத்தைச்சார்ந்த அழுகை.

பயன்—ஆற்றாமை யறிவித்தல்.

---

## விடு கதைகள்

1. ஜாடி மேலே குரங்கு (முந்திரிக்கொட்டை)
2. ஏறாத மரத்தில் எண்ணாயிரங்காய் (கேழ்வரகுக் கதிர்)
3. தச்சனிழைக்காத மரம் என்ன மரம்? (துடைப்பம்)
4. கறுப்புச் சட்டைக்காரன் காவலுக்குக் கெட்டிக்காரன் (பூட்டு)
5. கிணற்றைச் சுற்றிப்புல் (கண் இரப்பை)

544

# ஆராய்ச்சிப் பகுதி : Research

## சேதுபதிகளும் அவர்களுடைய நாணயங்களும்

[வித்துவசிகாமணி திரு. ப. அ. முத்துத் தாண்டவராய பிள்ளை]

(சஉசு-ம் பக்கம் தொடர்ச்சி)

ஒரு சரக்கு பணமாக உபயோகப்படுவதற்கு அதற்குச் சில இலக்ஷணங்கள் இருத்தல்வேண்டும். தனக்கென்றே தனியான ஒரு மதிப்புள்ள பொருளாயிருத்தல் அவசியம். ஒவ்வொருவனும் தான் கொடுக்கும் பொருளுக்குப் பதிலாக மாற்றிக்கொள்ள ஒப்புக்கொள்ளக்கூடிய மதிப்பு உள்ளதாக இருக்கவேண்டும். அதன் மதிப்பு பார்த்தவுடன் சுலபமாக நிர்ணயிக்கப்பட வேண்டும். எக்காலத்திலும் எல்லாத் தேசங்களிலும் பண நிமித்தம் உபயோகப்படுத்தப்பட்டு வந்தது உலோகங்களே என்று தோன்றுகிறது. நானாவிதமான உபயோகங்களுக்கும் சித்திரவேலைகளுக்கும் உலோகங்களையே உபயோகித்து வந்தார்கள். எவ்வளவுக் கெவ்வளவு தேவை ஏற்படுகிறதோ அவ்வளவுக் கவ்வளவு அளவு குறைவாகக் கிடைக்கும் உலோகங்களே அதிக மதிப்பைப் பெறுகின்றன. உலோகங்கள் அதிகமாகக் கையாடப் படுவதால் தேய்வு அழிவு சீக்கிரம் அடையாதிருத்தல், சிறு நுண்மையான பாகங்களாகப் பகுக்கப்படக் கூடிய குணத்தோடு கூடியவை, சிரமமில்லாமல் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்துக்கு கொண்டுபோகக் கூடியதாயிருத்தல், உழைப்பால் அவற்றின் மிகுதி ஏற்படல் இவை முதலானவையே நாணயத்துக்காக உலோகங்களை உபயோகிக்கும் காரணங்கள். நாணய மடித்தலும், சிற்ப சாஸ்திரத்துக் குட்பட்டது. சிற்பத்துக்குதவும் பொருள்கள் உலோகம், கருங்கல், செங்கல், மரம், மணல், சுண்ணச்சாந்து, தந்தம், சாயம், சர்க்கரை, மெழுகு முதலானவை. இவற்றுள் மேற்காட்டிய காரணத்தால் நாணயங்கள் அடிக்க உலோகங்கள் உபயோகிக்கப் படுகின்றன. பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம் ஆகிய பஞ்சலோகங்களும் சிற்ப சாஸ்திரத்தில் சொல்லப்பட்டவை. இரும்புக்குப் பதிலாகத் துத்தநாகம் நாணய மடித்தற்கு உபயோகப் பட்டது. மிக்க பூர்வகாலத்தில் வழங்கிய நாணயங்கள் வெள்ளியாலானவை. பொன்னைத் திட்டமான நாணய விலையுள்ளதாக உபயோகப்படுத்துவதற்கு முன் நெடுங்காலம்

வரையில் வெள்ளியே நாணயமாக அடிக்கப்பட்டது என திவான்பகதூர் தேசிகாசாரியார் அபிப்பிராயப் படுகிறார். இந்த அபிப்பிராயம் தென்னிந்தியாவைக் குறித்ததல்ல. பழைய தமிழ் இலக்கியங்களில் பொன்னாணயங்கள் தவிர வெள்ளி நாணயங்கள் வழங்கியதாகச் சொல்லக் கேள்விப்படவில்லை. முதலில் பொன்னை மொத்தமாக சங்குபோலவும், தாமரைப்பூபோலவும் செய்து நாணயமாக வழங்கிவந்தார்கள். இந்தக் கட்டிப்பொன் உருவங்கள் பாரம், துலாம், சேர் முதலிய திட்டமான நிரந்தர நிறையுள்ளன. பிற்காலங்களில் அவைகளைத் தேவலோக சங்கநிதி பதுமநிதிகளாகக் கொள்ளப்பட்டன. இவ்வகை நாணயங்களோடு சோழிகள், தூரான், தோல் முதலியவைகளும் பண்டமாற்றில் வழங்கி வந்தன. பிராமிசரி நோட்டுகளும் உண்டியல்களும் உபயோகப்பட்டு வந்தன. அவைகளுக்கு முறியெனப் பெயர். இராஜாங்கத்தாரோ அல்லது வர்த்தக சங்கத்தாரோ நாணய சாலைகளை நிறுவி கம்பத்தக்காரர்களை மேம்பார்வை பார்க்கும்படியாகவும் அவர்கள்கீழ் கம்மியர்களையும் நியமனம் செய்தார்கள். கம்பத்தக்காரர்களுக்கு ஓர் அளவு தங்கம் கொடுக்கப்பட்டது. அவர்கள் நிறையை ஒரு திட்டமாய் ஏற்படுத்தி நாணயங்களை அடித்து வெளியில் அனுப்புவார்கள். ஒவ்வொரு கிராமத்துக்கும் வியாபாரச் சங்க அங்கத்தினராக ஒரு நோட்டக்காரன் இருப்பான். அவன்தான் செலாவணி நாணயங்களை நிறுத்துப்பார்த்துச் செலாவணிக்கு லாயக்கானவை என்று சொல்லவேண்டும். அதன்பேரில்தான் திருட்டுக் கண்டுபிடிக்கும் இலாகா அதிகாரிகள் போலி நாணயங்களைக் கண்டு பிடிக்கவும், பரவாமல் தடுக்கவும் இவன் அந்த அதிகாரிகளுக்கு உதவுவான். பிறந்ததினக் கொண்டாட்டம் போன்ற விசேஷ நாட்களில் அரசர்கள் ஒரே அளவுள்ள பொன்னாலாகிய தூள், புஷ்பம், கனசதுரம் ஆகிய சிலவற்றைக் குடிகளுக்குத் தானம் செய்வதுண்டு. ஒரே அளவுள்ள பொற்றூள் மூட்டைகள் பணமாக விற்கப்படும். பொன்னுருண்டைகள் நாணயங்களாக உபயோகப்பட்டன. இந்தப் பொன்னுருண்டைகளை அல்லது நாணயங்களை ஒரே நிறையாகக் கட்டி வழங்குவதுண்டு. இப்பேர்ப்பட்ட மூட்டைகளை (கிழிகளை)த் தான் சிவனடியாராகிய திருஞான சம்பந்தர், பாணபத்திரன், தருமி ஆகிய கவிகள் பெற்றனர். பெரியாழ்வார் பதிகம்பாடி அறுத்துக் கொண்டதும் இம்மாதிரியான கிழிகளையே. . சுந்தரமூர்த்தி நாயனார் திருப்புகலூரிலும் விருத்தாசலத்திலும் பெற்றது சதுரமான பொற்கட்டிகளைத் தான். அவைகள் திட்டமான நிறையுள்ளனவாயும் பணமாக

அக் காலத்தில் வழங்கினவையாயும் இருந்தன. தமிழ் நாட்டிற்குப் பொன் வட தேசத்திலிருந்து வந்தது.

அப்பொன் மாற்றுத் தாரதம்மியத்தாலும் கிடைக்கும் இடங்களாலும் ஆடகம், கிளிச்சிறை, சாதரூபம், சம்புநாதம் என்று நான்குவகைப்பட்டது.

தமிழ் நாட்டார் பொன்னி (காவிரி) முதலிய ஆறுகளின் நடுவிடங்களினின்றும் பன்றிபோன்ற மலைகளினின்றும், கோலார், வைநாடு முதலிய சுரங்கங்களிலிருந்தும் பொன் பெற்றனர். பொன் அகப்படாத இடத்தில் இரசவாதிகளைக் கொண்டு தாழ்ந்த உலோகங்களைப் பொன்னாக்கிக் கொள்வார்கள் (பணவிடு பக்கம் 8). இந்நாட்டில் குறைவாக அகப்பட்டும், அகப்படாமலும் இருந்த மற்ற உலோகங்களைப் பிற தேசங்களிலிருந்து பண்டமாற்றாக வாங்கிக் கொள்வார்கள். நாணயங்கள் பில்லனாலும் செய்யப்பட்டன. காசு, பொன், பணம், சுவர்ணம், தங்கம், வராகன், ஹான்ஸ், கோவை, குலம், மது, அக்கம், கனம், மாஷம், செக்குளவர், ஸெனாபின், டக்கட், மோகர் முதலியவை பொன்னாணயங்கள். புராணம் கர்ஷப்பணம், பணம், ரைஸ்டாலர், ஸ்டிவர்ஸ், ப்யாஸ்டர்ஸ், ராயலின் முதலியன வெள்ளியாலானவை. செம்பு, ஈயம், துத்தநாக நாணயங்கள் காசு, பைசா, துட்டு, துக்காணி, சல்லி முதலியனவாம். இவைகளோடு இவைகளின் மடங்குகளும் இவைகளின் பாகங்களும் பெரிய நாணயங்களும் சில்லரை நாணயங்களும் வழங்கிவந்தன. பல வேறு நாணயங்கள் அவற்றின் முத்திரைகள் சேதுபதி நாணயங்களோடு சம்பந்தப்பட்ட தங்கச்சாலைகள் முதலியவைகளைப்பற்றிப் பணவிடு தூது (1602-1705) வாக்கியங்களில் பார்த்து அறியலாம். தென்னிந்திய நாணயங்களின் நிறைகள் உருவங்களான முத்திரைகளைப் பழங்கதைகள் முதலியவற்றைப் படிக்கத் தொடங்கு முன், அந்நாணயங்கள் எல்லாம் அக்ஷர, லிகித, ரூப, கணித, சில்ப, கனகப்பரீக்ஷை முதலிய சாஸ்திரங்களை ஆதாரமாகக் கொண்டு செய்யப்பட்டன என்பதை ஒருவன் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். இவைகளை ஆலோசியாமல் பயனைமட்டுங் கருதி அனுமானிப்பது தவறாக முடியும். கனக நூல் உலோகங்களின் பரிசுத்தமும் அவற்றில் சேர்க்கப்பட்ட உலோகங்களின் சம்பந்தங்களையும் பிரகாசத்தையும் நிறை முதலிய பிரகிருதி சம்பந்தமான குணங்களையும் குறித்துச் சொல்கிறது. இதற்கு அர்த்த சாஸ்திரமும் உதவுகிறது. இந்த விஷயங்கள் நாணயங்களின் நிறை மாறுதல்களை அறிவதற்குச் சாதனமா யிருக்கின்றன. ரூபம்

நாணயங்களின் உருவத்தைப்பற்றிச் சொல்லும் நூல். அக்ஷர லிகிதங்கள் பழங்கதைகளையும் சித்திர உருவங்களையும் அவைகள் எப்படிக் காட்டப்படவேண்டும் என்றும் கூறுகின்றன. கணிதம் நாணயங்களின் அளவு நிறைகளை நிர்ணயிக்கிறது. நாணயம் என்பது மேற்கண்ட சாஸ்திரங்களையும் நூல்களையும் அநுசரித்து ஏற்பட்ட விளைவுதான். நாணயமடித்தல் சிற்பத்தைச் சார்ந்தது. காலம், நிறை, பருமன், கனபரிமாணம், முதலிய அளவைகளின் அடிப்படையாயுள்ளது பரமாணு. தென்னிந்தியாவில் நெல் சாமானிய பழக்க வழக்கங்களுக்கு அடிப்பரமாணுவாகக்கொண்டு வழங்குகிறார்கள். நெல்லே நீட்டலளவை, எடுத்தலளவை, கன அளவைகளுக்கும் உபயோகிக்கிறார்கள். பழைய ஆர்க்காட்டு ரூபாயை ஆதாரமாகக் கொண்ட தற்காலத்திய ரூபாயும் 180 தான்யமணி நிறை கொண்டது. ஒரு பலம் 540 தான்யமணி 34·987 கிராம் அல்லது 1·2342 அவுன்ஸ்.

| | | | |
|---|---|---|---|
| 4 நெல் | = | 1 | குன்றி |
| 5 குன்றி | = | 1 | மாஷம் |
| 8 மாஷம் | = | 1 | கழஞ்சு |
| 2 கழஞ்சு | = | 1 | கர்ஷா |
| 4 கர்ஷா | = | 1 | பலம் |
| $\frac{1}{10}$ பலம் | = | 1 | வராகன் எடை |
| $\frac{1}{10}$ வராகன் எடை | | 1 | பண எடை. |

ஒரு கழஞ்சு $10\frac{1}{2}$ பண எடைக்குச் சரி என்று வைத்துக் கொண்டால் அது 56·7 தான்யமணிக்குச் சரியாகும். முதலில் கழஞ்சு என்பது பொன் நிறைப் பிரமாணமாக இருந்தது. அதன் பத்தில் ஒரு பாகம் பொன் பணம். பிற்காலத்தில் குறைந்த நிறையுள்ள வராகன் எடையை வைத்துக் கொண்டார்கள். அதில் பத்தில் ஒரு பாகம் ஒரு பொன் பணமாயிற்று. சில இடங்களில் 10·5 பண எடை, ஒரு கழஞ்சுக்குச் சரி என்று வைத்துக் கொண்டார்கள். தற்காலத்திய நாணய அதிகாரிகள் பின்வருமாறு நாணயங்களின் நிறைகளைக் குறித்திருக்கிறார்கள்: வடதேசத்தார்போல தென்தேசத்திலும் அந்தந்த இடத்துக்குரிய வித்துக்களின் நிறைகளை ஆதாரமாகக் கொண்டு, நாணயங்களின் நிறைகளை நிர்ணயிக்கிறார்கள். வடதேசத்தின் நிறை குன்றுமணியைக் கொண்டு ஸ்தாபிக்கப்பட்டது. அது சுலபமாய் சுமார் 1-80 தானிய மணிகளுக்குச் சரியாகவைத்துக்கொள்ளலாம். இந்த ஏற்பாட்டின்படி பூரண அல்லது வெள்ளிக்குத்து அடையாளமுள்ள நாணயம் 32 குன்றுமணிகளின் நிறைக்குச் சரி. தென்தேசத்தார் 50தானிய

மணிக்குச் சரியான கழஞ்சு விதைகளையும் அதில் 1-10 நிறையுள்ள மஞ்சாடி வித்துகளையும் தங்கள் நிறைக்கு ஆதாரமாகக் கொண்டார்கள். பிற்காலத்தில் ஏற்பட்ட நாணயங்கள் ஒவ்வொன்றும் 52 தான்யமணி நிறையுள்ள வராகனில் 10-ல் ஒரு பங்குள்ளது. இந்த நாணயச் செலாவணி முறை 1833 வரையில் மாறுமல் நடைபெற்றது. இக்காலத்திய டச்சுக்கார டக்கட் (Ducat) நாணயங்களும் வெனிஸ் நாட்டு ஸெக்வின் நாணயங்களும் வராகன் விலைக்கு அல்லது பொற்கழஞ்சு விலைக்குச் சரியாக ஒருவாறு எங்கும் செலாவணி ஆயின. மிகவும் புராதனமான காலத்து நாணயங்களிற் சில 70 தானியமணி நிறையுள்ளனவாக இருந்தன. கடைசிவரியில் கண்டபடி பழைய பொன் நாணயங்கள் 70 தானியமணி நிறை யுடையனவாயிருந்தன. இதை நோக்க நாணயங்களின் நிறை ஏற்றத்தாழ்வுகள் உண்டாயினவாகத் தெரியவருகிறது. இந்த மாறுபாடு நாணயங்கள் அடித்து வெளிப்படுத்தப்பட்ட காலத்தில் மார்க்கட் விலைவாசிப்படி பொன்னின் மாற்று வித்தியாசத்தால் இருக்கலாம் என்று சமாதானம் சொல்ல வேண்டும். பொன்னின் நயம் ஆணிப் பொன்னின் நிலையான மாற்றுப்போல சுத்தமாயிருந்தால் ஒரு கழஞ்சு 67·5 தானியமணி நிறையுள்ளதாய் இருந்தது. அப்படிக்கின்றி மட்ட உலோகங்கள் அளவுக்கு மீறி சேர்க்கப்பட்டிருந்தாலும் பொன் விலை குறைந்திருந்தாலும் நிறை அதிகமாக இருக்கலாம். இராஜராஜன் ஆட்சிக்காலத்தில் பொன் மிகுதியும் கிடைத்தபடியால் அந்நாணயத்தின் நிறை 90 தானியமணி வரையில் இருந்தது. பொன் கிடைக்காமையாலும், பொன்விலை எக்காரணத்தாலாவது ஏற்றமாயிருந்தாலும் நிறையில் குறையும்படி நேரிடலாம். பண்டைய காலத்தில் பொன்னின் விலையும் மதிப்பும் மற்ற சாமான்களுடன் அதன் சம்பந்தமும் நிரந்தரமாக ஏற்படுத்தப்பட்டது. வியாபார சங்கத்தார்களோ வேறு எந்தச் சங்கமோ உப்பு முதல் கற்பூரம் வரையில் உள்ள 64 சரக்குகளையும் வகுத்து ஒன்றுக்கொன்று சம்பந்தத்தையும் ஏற்படுத்திப் பண்டமாற்றலில் பொன்னுக்கு மாற்று பதில்சம்பந்தத்தையும் ஏற்படுத்தினர்கள். இந்தத் தாரதம்மியம் நிலையாய் ஏற்பட்டுவிட்டது. பொன்னின் மாற்று நயம் காரட் கணக்கில் ஏற்பட்டது. நாணயங்களும் உலோகங்களும் கழஞ்சுக்கணக்கிலும் முத்து ஜவ்வுகணக்கிலும் சிவப்புக் குந்திரக்கணக்கிலும் வைரம் மஞ்சாடிக்கணக்கிலும் பச்சை ராதிக்கணக்கிலும் ஏற்பட்டன. உப்பு முதல் கற்பூரம் வரையில் உள்ள சாமான்கள் ஒரு கழஞ்சு பொன்னுக்கீடாகக் கணக்கிடப்பட்டன. இவைகள் எல்லாம் அர்த்த சாஸ்திரத்தில் வைசிய சரித்திரத்தில் விவரமாய்க் குறிக்கப்

பட்டிருக்கின்றன. நாணயங்கள் சம்பந்தமாய் பொன் வெள்ளி களின் மாற்று நயமும் நிறையும் திட்டமாய் ஏற்படுத்த வல்ல வர்களா யிருந்தார்கள். மத்தியகாலத்தில் போட்டியின் மிகுதி யாலும் வியாபார விரிவினுலும் சம்பந்தம் கட்டுக்கடங்காமல் குழப்பம் உண்டாய் நாணயங்களின் நிறை ஏறவும் குறையவும் தலைப்பட்டது. இவைகளையெல்லாம் நோக்கும்போது இந்திய நிறையும் மற்ற அளவைகளும் சுதேசத்துக் குரியதாக இருந் தன. அவைகள் ஒரு அணு அல்லது அதற்குச் சரியான மடங் கான உள்ள (குணமான) தானியவித்து பிரமாண முள்ளது மாக இருந்தது. நாளாக நாளாக அந்நியதேசத்தாரின் பழக் கம் ஏற்பட்டகாலத்தில் சிறிய மாறுதல்கள் உண்டாயிருக்கக் கூடும்.

முதலாவது கரிகாலன் காலத்தில் (அதாவது கி. பி. முத லாவது நூற்றுண்டின் மத்தியில்) புகார் நகரில் கிரேக்கர், சீனர் ஜாவாதேசத்தார் முதலிய அந்நிய நாட்டு வியாபாரிகள் இருந் தார்கள் என்றும் சோழ நாட்டுக்குடிகள் சிலோன், பர்மா, தேசங்களோடு வியாபாரஞ் செய்துவந்தார்கள் என்றும் தெரிய வருகிறது. இதற்கு அநேக நூற்றுண்டுகளுக்கு முன்னமேயே இந்திய நாட்டுத் தென்பாகத்தார் தங்கள் அக்ஷரேகையின் நேர் கிழக்கிலும் மேற்கிலும் உள்ள க்ரீஸ், ரோம் முதலிய நாட்டாரோடும் கலந்து வர்த்தகம் நடத்திஞர்கள். அந்நிய நாட்டு வர்த்தகத்தில் ஜனங்களுடைய சௌகரியத்தை முன் னிட்டு நாணயங்களின் நிறையில் சுதேசிய தரத்திலிருந்து (Indigenous nature) கொஞ்சம் மாறுதல் அடைந்தது. ட்ராக்மா அல்லது உலகப்பொதுநிறைக்குஅஸ்திவாரம்போன்ற பெனிஷியன் நிறையைத் திராவிடர்கள் ஏற்படுத்திக் கொண் டார்கள் அல்லது உலக நிறைகளெல்லாம் அளவினுல் காலக் கணிதம் காட்டும் Pendulumத்தை ஆதாரமாகக் கொண்டி ருக்க வேண்டும் (that all the weight of the world are based upon one primitive universal standard of a pendulum vibrating seconds) என்ற கொள்கைக்கு இடங்கொடுக் கிறது.

இனி நாணயங்களின் உருவங்களையும் அவை சம்பந்த மான கதைகளையும் கவனிப்போம். இவைகள் சக்கர (charkara) வித்தையைப் பொறுத்திருக்கிறது. யந்திரம் என்ருல் அதற்கு ஒரு உருவம், அச்சுப்பதிவு, சரித்திரம் என்பவை இருக்கவேண்டும். வியாபக அல்லது பிரகாச சக்தியைக்குறிக்க அந்த யந்திரத்தில் கிரணக் (கதிர்) குறிகளும் குறிக்கப்பட் டிருக்கவேண்டும். கதிர் வியாபித்திருப்பதற்கு அறிகுறியாக சூர்யன், சந்திரன், நக்ஷத்திரங்கள், அக்னி, தீபங்கள் இவை

களைத்தான் காட்டுவது வழக்கம். நாணயங்களின் கனதியும் மேற்பரப்பும் இது சம்மந்தமாகக் கவனிப்பது முண்டு. ஒரு ஜாதிக்கோ (Race) அரசனுக்கோ அத்தேசத்தின் மதத்துக்கோ உரிய கதை அடையாளங்கள் நாணயங்களில் பெரும்பாலும் அமைக்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக, பண்டைப் பாண்டிய நாணயங்களில் முன்பக்கத்தில் புத்தமதக் குறிகளுடன் ஒரு யானையின் உருவம் அல்லது ரிஷபத்தின் உருவம் பொறிக்கப்பட்டிருந்தது. ஆந்திர வம்சத்தாரும் தங்கள் நாணயங்களில் புத்தமத சம்பந்தமான யுக்திகள், உருவங்களுடன் வில், அம்பு, குதிரை, சிங்கம், யானை முதலிய பல உருவங்கள் அமைத்திருந்தார்கள். பிற்பட்ட பாண்டிய நாணயங்கள் பாண்டிய வம்ச அடையாளமாகிய மீனின் உருவத்தை ஒற்றையாகவும், இரட்டையாகவும், மாறியிருப்பனவாகவும் உடையனவாயிருந்தன. வராகன் என்னும் நாணயத்தின் பெயர்க்குக் காரணமாய் சாளுக்கியர் பன்றியையும் சோழ அரசர் புலியையும் விஜயநகர அரசர் இடபத்தையும் சைவர்களுக்குரிய மற்றைய உருவங்களையும் வைஷ்ணவ அடையாளங்களாகிய கருடன், அனுமான் முதலான உருவங்களையும் அமைத்திருந்தார்கள். இவையாவும் மேற்கூறிய வகுப்பிலடங்கும் அக்கதைகளும் குறிகளும் இந்நாட்டிலேயே உண்டானவை.

இனி சேதுபதி நாணயங்களைப்பற்றிக் கவனிப்போம். முதலில் அந்நாணயங்களின் காலத்தை எடுத்துக்கொள்வோம். தென்னிந்திய நாணயங்களை மூன்று காலங்கள் சம்பந்தமான மூன்று பிரிவுகளாகப் பிரித்துக்கொள்கிறேன். கிறிஸ்து சகாப்தத்திற்கு முன்னமேயே சேர, சோழ, பாண்டிய இராஜ்யங்களில் அவ்வரசர்களால் தென்னிந்திய நாணயங்கள் அடிக்கப்பட்டன. தற்கால நாணயங்கள் அடிக்கும் ஏற்பாடு இந்தியாவில் ஆங்கில அரசாட்சி ஆரம்ப முதல்தான். முதலில் 1833-1835 ஆண்டுகளில் ஏற்பட்ட நாணயச் சட்டப்படிக்கும் பின்னர் 1870-ம் ஆண்டு 23-வது ஆக்ட் 1893-ம் ஆண்டு 8-வது ஆக்ட் 1899-ம் ஆண்டு 22-வது ஆக்ட்படிக்கும் அதன்பின் நாணயங்களையும் தங்கச்சாலையையும் பற்றிய முன்னைய சட்டதிட்டங்களை யெல்லாம் ஒன்றுபடுத்தித் திரட்டியும், திருத்தியும் ஏற்படுத்திய 1906-ம் ஆண்டு 3-வது ஆக்டின்படிக்கும் நாணயங்கள் அடிக்கப்பட்டு வெளிவந்தன. இவற்றின் இடையிட்ட காலத்தையே நாணயத்தின் மத்தியகாலம் என்று சொல்லலாம். அவையாவன, சோழச்சக்கரவர்த்தி, பல்லவர், சாளுக்கியர், ஆந்திரர், அநுலோம பாண்டியர், விஜய நகர நாயகர்கள், மகம்மதியர், பல ஐரோப்பிய வர்த்தக சங்கத்தார், கம்

பனிக் காளிங்கராயர் போன்ற சில தலைவர்கள் ஆகிய இவர்க ளால் ஏற்பட்ட நாணயங்கள் வழங்கிவந்தன. இம்மத்திய காலத்தையும் நான்கு உட்பிரிவுகளாகப் பிரிக்கலாம். முத லாவது உட்பிரிவில் புத்தமத சம்பந்தமான உருவங்களுள்ள அழகிய விசித்திரமான பாண்டிய நாணயங்களும் (கி. பி. 90-220) காலத்திலிருந்த ஆந்திரர் நாணயங்களும் அடங்கும். சிறிது காலத்துக்குப்பின்பு மீன் உருவமைந்த பாண்டியர் நாணயங்களும் அவனி பாண்டியன், சுந்தரபாண்டியன் கச்சி வழங்கட்பெருமான், சோணாண்டு கொண்டான், கோதண்ட ராமன் இவர்களின் கதைகளடங்கிய உருக்கள் பதித்த நாண யங்களும் வழங்கின. இந்த முதற்பிரிவு காலத்திலேயே பல்லவ அரசர்களின் ஆட்சி பரவியது. இவர்கள் நாணயங்களில் எருது, சிங்கம், குதிரை, மூன்று பாய்மரக்கப்பல் உருக்கள் அமைந்திருந்தன. ஆந்திர நாணயங்களிற் போலவே புத்த சம யத்துக்குரிய உருவங்கள் காணப்பட்டன. சாளுக்கியருடைய பன்றி உருநாணயங்கள் மத்திய பிரிவுகாலத்தின் முதற்பாகம் முடியும் வரையில், செலாவணியாய் இருந்ததாகத் தெரிகிறது. அடுத்த காலப்பிரிவு 11-முதல் 14-வது நூற்றாண்டு வரையி லுள்ள காலம். இக்காலத்தில் சோழ அரசாட்சி உன்னத நிலை யில் இருந்தது. சோழ அரசர்களது புலிக்குறிபோய் மீன், வில், அடுத்துப் பொறிக்கப்பட்டன. இவ்வாறான நாணயங்களுக் குள் மிகப் பயன்தரும் நாணயங்கள் இராஜராஜ சோழன் காலத்தவை. இராஜ உடைதரித்த அரசனின் நின்றகோலத் தில் பிரசித்தமான உருவம் நாணயத்தின் முன்பக்கத்தில் அமைக்கப்பட்டது. இராஜராஜ சோழன் காலத்திற்றான் இந்த நின்றகோலத்து உருவம் பாண்டிய அரசர்களைப் பின்பற்றி பதிக்கப்பெற்றது. பாண்டியர்களோ வட இந்தியாவிலுள்ள குப்த ராஜாக்களின் நின்றகோல உருவத்தைப்பார்த்துத் தங் கள் நாணயங்களில் பின்புறத்தில் உட்கார்ந்து இருந்தகோல மாய்ப் பொறித்தார்கள். சோழ அரசர்களின் நாணயங்களைப் பார்த்து அவற்றைப்போல கி. பி. 1153-ல் ஆண்ட நெப்போ லியன் பராக்கிரம பாகு என்னும் இலங்கை அரசனும் நாண யங்களை அடிக்கலானான். இராஜ ராஜன் போர்புரிந்து வெற்றி யடைந்து ஜயசீலனாய் ஆளுங்காலத்தில் நாட்டில் எங்கும் சமா தானம் குடிகொண்டிருந்தது. சோழ அரசன் இலங்கையை வென்றதால் ஒருவேளை அவ்விலங்கையில் அச்சோழநாணயங் கள் ஏற்பட்டிருக்கலாம். விஜய நகரத்து அரசியல் காலம் (1340-1555) மூன்றாம் பிரிவு காலத்தோ டொத்திருக்கிறது. இக்காலத்தில் பொன் நாணயச் செலாவணி ஆதிக்கம் பெற் றிருந்தது கவனித்தற் பாலது.




## சிவஞான போதக் கருத்து

### ஆறுவது சூத்திரம்

[திரு. மா. வே. நெல்லையப்ப பிள்ளை அவர்கள்]

பதிப்புரிமை ஆக்கியோற் குரியது.

(சிலம்பு 14-பரல் 10: பக்கம் 483 தொடர்ச்சி.)

1. நான்காஞ் சூத்திரத்தில் ஆன்மாவி னிலக்கணமும் அஞ்சாஞ் சூத்திரத்தில் பாச இலக்கணமுங் கூறிய ஆசிரியர், இலக்கண இயலுள் தாங்கூறாது எஞ்சிநின்ற பதிஇலக்கணத்தை ஆறுஞ் சூத்திரத்திற் கூறுகின்றார். இதனால் அவாய்நிலை பற்றிய சூத்திர இயைபு பெறப்படும்.

2. மேலை அஞ்சாஞ் சூத்திரம் இரண்டாம் அதிகரணத்தில் ஐம்பொறிகள் ஆன்மாவாலறிந்தும் தம்மையும் தம்மை அறிவித்து நிற்கும் ஆன்மாவையும் அறியாதவாறு போல, ஆன்மா முதல்வனால் அறிந்தாலும் அங்ஙன மறிந்த தன்னையும் தன்னை அறிவித்து நிற்கும் முதல்வனையும் அறியாது என்று ஆசிரியர் கூறினர். அங்ஙனம் ஆசிரியர் கூறியதுபற்றி முதல்வன் எவ்வாற்றாலும் அறியப்பட மாட்டானோ என்னும் ஆசங்கையை (ஐயப்பாட்டை) நீக்குதற்கு எழுந்தது இந்த ஆறுஞ் சூத்திரம். இந்த ஆசங்கைபற்றிய இயைபான் அதிகரண இயைபு பெறப்படும்.

3. மேலே கூறப்பட்ட அஞ்சு சூத்திரங்களும் இந்த ஆறுஞ் சூத்திரமுஞ் சேர்ந்து பதி பசு பாசம் என்னும் முப்பொருள்களின் பொது இயல்புகள் கூறும் பொதுஅதிகாரம் எனப்படினும், பதிப்பொருளின் பொது இலக்கணம், பாசப்பொருளின் பிரமாணங் கூறும் இரண்டாஞ் சூத்திரத்தில் முதல்வனுக்குத் துணைக்காரணம் முதற் காரணங்களது உண்மை கூறுங்கால், துணைக்காரணம் அவனது குணமும் முதற்காரணம் அவனதுஉடைமையு மாயவனது இலக்கணக் கூற்றிலகப்படுதல் பற்றி "அவையே தானேயாய்" என்பதனாற் கூறப்பட்டது. ஆதலின் இச்சூத்திரத்திற் கூறப்படுவது முதல்வனது சிறப்பிலக்கணம். அதனாலேதான் இந்த

ஆறாஞ் சூத்திரம் இலக்கண இயலினிறுதிக்கண் உண்மை அதிகாரம் கூறத்தொடங்கும் ஏழாஞ் சூத்திரத்தைச் சாரவைத்துக் கூறப்பட்டது.

4. மேலை அஞ்சு சூத்திரங்களினாலும் பதி பசு பாசம் என்னும் முப்பொருள்களின் பொது இயல்புகள் பிரமாண இயலாலும் இலக்கண இயலாலும் உலகியல்மேல் வைத்துக் கூறப்பட்டன. முதற்கண் ஒரு பொருளின் உண்மையைப் பெயர் மாத்திரையான் உத்தேசமாகப் பிரமாண முகத்தாற் கூறிப் பின்னர் அதற்கு இலக்கணங்கூறி அவ்வுண்மையை வலியுறுத்துதல் அறியும் முறைமை என்பதுபற்றி ஆசிரியர் இங்ஙனங் கூறினார். பதிப்பொருளுக்குப் பொது இயல்பு, பதி ஒன்றே, நவந்தரு பேத வடிவங்கள் கொண்டு உயிர்ப் பொருளோடும் உயிரில்பொருளோடும்ஒன்றாயும் வேறாயும் உடனாயும், (அத்துவிதமாய்) நின்று ஐந்தொழில் செய்யும் நிலை என்பது; அப்பொதுஇயல்பானது எக்காலத்தும் நிலைபெறாது இடையே தோன்றி மறைவதாகலின் பொய் (அசத்து) என்று கூறப்படும். அதுஉயிர்களால் தங்கள் கட்டு நிலையில் கேட்டல் சிந்தித்தல் என்னும்இருதிறன்களாலமைந்த ஆராய்ச்சி அறிவால் பதிக்கு வேறாய்நின்று(துவிதமாய்)அறியப்படும் நிலை.பதிப்பொருளின் உண்மையை ஆசிரியர் முதலாவது சூத்திரத்தில் பிரமாண முகத்தாற் கூறி இரண்டாவது சூத்திரம் முதலாவது அதிகரணத்தில் மேலே கூறப்பட்டவாறு இலக்கண முகத்தாலும் கூறி நிலை நாட்டினர்.

5. பசுப்பொருளினது உண்மையை ஆசிரியர் முதற்கண் பிரமாணங் கூறுமுகத்தால் மூன்றாவது சூத்திரத்திற் கூறிப் பின்னர் இலக்கணங் கூறுமுகத்தாலும் நான்காவது சூத்திரம் மூன்றாவது அதிகரணத்திற் கூறி வலியுறுத்தினார். பசுவுக்குப் பொது இயல்பு, உயிர் கருவிகரணங்களோடு கூடி நின்று சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம், ஆகிய அஞ்சு அவத்தைகளையும் பொருந்திநிற்றல் என்பது. இந்த அஞ்சு அவத்தைகளையும் ஆசிரியர் மூன்றாவது சூத்திரத்தில் தொகுத்தும் நான்காவது சூத்திரத்தில் விரித்தும் கூறினர்.

6. ஆணவ மலத்தினது உண்மையை ஆசிரியர் முதற்கண் முதலாவது சூத்திரத்தில் "மலத்துளதாம்" என்றதால் உலகிற்கு புனருற்பவங் கூறுங்காற் கூறிப் பின்னர் அதன் இலக்கணத்தை நான்காஞ் சூத்திரம் இரண்டாம் அதிகரணத்தில் "ஆன்மா சகச மலத்துணராது" என்று கூறினார். ஆணவ

மலத்துக்குப் பொது இயல்பு, சகல நிலையில் ஆன்மாவோடு கருவிகளுடன் கூடி மயக்க அறிவை (விபரீத உணர்வை)ச் செய்வதற்கு ஏதுவாயுள்ள சாக்கிர முதலிய அஞ்சவத்தைகளை யும் அடையும்படி செய்வித்தல் என்பது.

7. திரோதான சத்தியினது உண்மையை ஆசிரியர் இரண்டாஞ் சூத்திரம் இரண்டாம் அதிகரணம் "நெல்லிற் குமி யும்" என்ற முதற்குறிப்பு வெண்பாவில் "வல்லிமல கன்மம் வள்ளலாராம்" என்றதாற் கூறினர். அதன் இலக்கணத்தை அவர் அஞ்சாவது சூத்திரத்திற் கூறினர். திரோதான சத்தி யினது பொது இயல்பு, உயிர்கட்குப் பக்குவம் வருவித்தற் பொருட்டு ஆணவ மலத்தின் வழி நின்று அதனைக் காரியப் படுத்தி மறைப்பைச்செய்து உலக விடய போகத்திலழுத்து வித்தல் என்பது.

8. வினையினது உண்மையை ஆசிரியர் முதற்கண் இரண் டாவதுசூத்திரம் இரண்டாவது அதிகரணத்தில் கூறினர். முதல் வன் உயிர்கள் பொருட்டுச் செய்யும் ஐந்தொழிற்கு, வினையும் அவன் ஆணையை நடாத்துதற்கு ஒரு துணைக்காரணமேயாய் அமைதலினாலும், உயிர்கட்குக் காரியங்களெல்லாம் ஒருங்கே தோன்றாது அடைவே தோன்றுதற்குக் காரணம் வினையே யன் றிப் பிறிதின்மையாலும், வினையில்லையாயின் உயிர்கள் விதித் தன செய்து விலக்கியன வொழிதலாற் பயனின்றாய் முடியும் என்பதனாலும் வினையினது உண்மை துணியப்படும். வினையா னது திரோதான சத்தியினது கருவியாயிருத்தலின் அதன் இலக்கணம் அஞ்சாஞ் சூத்திரம் திரோதான சத்தியினது இலக்கணம் கூறுமுகத்தானே கூறப்பட்டது. வினையினது பொது இயல்பு, திரோதான சத்திக்குக் கருவியாய் நின்று, பிறப்பு இறப்பிற்குக் காரணமாகி, அறம், பாவம் என இருவகைப் பட்டு முறையே நன்மை தீமைகளாகிய காரண ஏதுக்களையும் இன்ப துன்பங்களாகிய காரிய ஏதுக்களையும் தோற்றுவித்து, காரியப் பிரபஞ்சம்போல உற்பத்தி நாசமுடையதாய் ஆன் மாக்களைப் பந்தமுறுத்தி உலக விடய போகங்களுக்கு வேண் டப்படுந் துணைப்பொருள்களைத்தேடி ஈட்டுதலினும் அப்போ கங்களை நுகர்தலினும் காற்றாடிபோல் ஓயாமலுழன்று முயலும் படி செய்தல் என்பது.

9. மாயையினது உண்மைக்கு ஆசிரியர் முதலாவது சூத்திரம் இரண்டாம் அதிகரணத்தில் 'இலயித்த' என சற்கா ரிய வாதம் கூறுதலினாலும், இரண்டாஞ் சூத்திரம் இரண்டாம் அதிகரணத்தில்இருவினை உண்மைக்கோதிய பிரமாணமே அவற் றிற்குப் பற்றுக்கோடாகிய மாயை உண்மைக்கும் பிரமாணம் என்பதனாலும் பிரமாணங்கூறி அதனிலக்கணத்தை அஞ்சா

வது சூத்திரத்தில் திரோதான சத்தியினது இலக்கணங் கூறுதலாலே கூறினர். வினையைப்போல மாயையும் திரோதான சத்திக்குக் கருவியாயிருத்தலால் திரோதான சத்தியினது இலக்கணம் கூறுதலால் மாயையினது இலக்கணமும் கூறப்பட்டவா றாயிற்று. மாயையின் பொது இயல்பு, ஆன்மா, விடயங்களை அறியுமாறு கண்ணுக்கு விளக்கொளிபோல் அதற்குக் காட்டாகி நின்று ஆன்ம ஞானத்தை விளக்குதல் என்பது.

10. மாயேயம் மாயையின் காரியமாதலின் மாயைக்குக் கூறப்பட்டது மாயேயத்துக்கும் பொருந்தும்.

11. இங்ஙனம் ஆசிரியர் மாணவர்க்கு அறிவுறுத்தும் பொருட்டுப்பொது அதிகாரத்தில் மேலை அஞ்சு சூத்திரங்களாலும் முப்பொருள்களின் பொதுஇயல்புகள் கூறியபின், அடுத்த ஏழாஞ் சூத்திரமுதற் கூறப்புகும் உண்மை அதிகாரத்துக்குத் தோற்றுவாய் செய்யுமுறையில், அம்முப்பொருள்களில் சத்து யாது, அசத்து யாது, என்னும் ஐயம் நிகழாமைப்பொருட்டுச் சத்தினியல்பு இது, அசத்தினியல்பு இது என்று தெரித்துணர்த்துவான் இந்த ஆறுஞ் சூத்திரம் கூறுகின்றார். அசத்தினியல்பை, ஆசிரியர் தாமிதுவரையும் கூறிப்போந்த காரிய உலகத்தின் மேல்வைத்து அநுபவங்காட்டி விளக்கியும் சத்தினியல்பை இனித்தாம் கூறப்போகும் பதிப்பொருளின் சிறப்பிலக்கணத்தின் மேல்வைத்து விளக்கியும் கூறுகின்றார்.

12. உலகமானது சூக்குமமாகிய சத்திவடிவாய் நிற்கும் காரணவத்தையில் சத்துப் பொருளேயாமாயினும் காரியாவத்தையில் அதன் தூலவடிவம் இத்துணைப்பொழுது நிற்குமென நம்மனோரால் அறியவாராது நீர்மேலெழுத்தும், கனவும், பேய்த்தேரும் போலத் தோன்றிக் காட்சிப்புலனாய் விரையக் கெட்டு அழிந்துபோந் தன்மையுடையது ஆதலின் அசத்துப் பொருளெனப்பட்டது. காரியவுலகம் தனுகரண புவன போகப் பொருள்களி னுருவங்களாயுள்ளது. கரணங்களோடு கூடிய மக்களுடைய உடல்களழிதலையும், அவை மீண்டும் தாய் வயிற்றில் சுக்கில சுரோணிதமாய்த் தோன்றிப் பரிணமித்து வளர்ந்து உயிரோடு கூடிப்பிறத்தலையும், புவனங்களொருசேர அழிதலையும், மீண்டு தோன்றுதலையும் சில் வாழ்நாள் சிற்றறிவோடு கூடிய மக்களாகிய நாம் பார்க்க முடியாவிட்டாலும், போகப் பொருள்கள் அடிக்கடி நிலைமாறி அழிதலையும் மீண்டு மாதலையும் நாம் கண்கூடாகப் பார்த்துக்கொண் டிருக்கின்றோம். நமது உலக வாழ்விற் காணப்பட்டன அனைத்தும் தோன்றியபொழுதே கெட்டு மறைந்துபோம் இந்திரசாலம்

போலவும், தோன்றியபின் கடைபோதலின்றி இடைக்காலத்திலே கெட்டு மறைந்துபோம் கனக்காட்சி போலவும், தோன்றியபின் ஒரு காரணங்காட்டிக் கெட்டு மறைந்துபோம் பேய்த்தேர் (mirage) போலவும், நெடுங்காலம் நிலைபெறுவன போலத் தோன்றி விரைந்து கெட்டு மறைந்துபோமியல்புடையன. இங்ஙனம் தோன்றி அழிந்து மறைந்துபோம் அசத்தா மியல்பையுடைய காரிய உலகத்தை உயிர், பசு பாச ஞானங்களாகிய ஏகதேசச் சுட்டறிவா லறிகின்றது. இந்தச் சுட்டறிவால் முதல்வன் அறியப்படமாட்டான் என்று ஆசிரியர் முதற்கண் முதல்வனுடைய சிறப்பிலக்கணங் கூறுகின்றார். இந்தச் சுட்டறிவால் முதல்வன் அறியப்படுவனென்னில் அவன் காரிய உலகம்போல மேலே கூறப்பட்டவாறு ஏகதேசப் பொருளாகி அழிவெய்துவன். அதுபற்றி முதல்வன் எவ்வாற்றானு மறியப்படா னென்னில் அவன் முயற்கோடுபோல சூனியப் பொருளாகி அவனானுயிர்களுக்கு ஆவதோர் பயன் யாதுமில்லை என்பதாய் முடியும்; அப்படியானால் அவன் எவ்வாறு அறியப்படுவா னென்னில், பதிஞானத்தால் மாத்திரம் அறியப்படுவன்: பதிஞான மென்பது உயிர் தன்னைக் கருவிகளினின்றும் பிரித்து அருளையே காட்டாகக் கொண்டு அவ்வருளோ டத்துவிதமா யொற்றித்து நின்று தற்போதமின்றி அறியும் வியாபக அறிவு. இந்த வியாபக அறிவால் உயிரானது எங்கணு நிறைந்து வியாபகமாய் விளங்கு முதல்வனை அறியுமென்று ஆசிரியர் முதல்வனுடைய மற்றொரு சிறப்பிலக்கணத்தைக் கூறுகின்றார். இதனால் முதல்வன் பசுபாச ஞானங்களா லறியப்படாமையால் சிவமும், பதிஞானத்தா லறியப்படுதலிற் சத்தும் என்ற இரண்டு இலக்கணங்களாகிய 'சிவசத்து' உடையவன் என்பது பெறப்படும். 'சிவசத்து' என்பது வடமொழி இலக்கண முடிபு இருபெயரொட்டுப் பண்புத்தொகையாதலின் அது தமிழ்மொழியில் சிவச்சத்து என்றிருத்தல் வேண்டும். சிவ என்ற சொல்லில் சிகரம் எல்லாப் பொருள்களையுந் தன்னுளடக்கி அவற்றைக் கடந்து நிற்கும் சிவத்தையும், வகரம் எல்லாப் பொருள்களோடுங் கலந்து வியாபித்து நிற்கும் அருளையுங்குறித்தலால் எங்கணும் அருளால் நிறைந்து எவற்றையுங் கடந்து நிற்கும். 'சிவ' என்ற இலக்கணம் பசு பாச ஞானங்களாகிய ஏகதேசச் சுட்டறிவால் அறியப்படமாட்டாது என்பதும், என்றும் ஒரு நிலையுடையதாய் எங்கணும் சூக்குமமாய் விளங்கும் சத்து என்ற இலக்கணம் பதிஞானமாகிய வியாபக அறிவால்மட்டு மறியப்படும் என்பதும் பொருத்தமுடையதாயிருத்தலை அறிக. மேலே கூறியவாற்றால் 'சிவ' என்பது எவற்றையுந் தன்னுளடக்கி எங்கணும்

வியாபகமா யெவற்றையு மியக்கும் சித்து (அறிவு) என்று பொருள்படுதலால் சிவசத்து என்பது சித்துச்சத்து என்னும் பொருட்டு ஆகும். முதல்வனுடைய சிறப்பிலக்கணத்தைக் குறிக்கும் 'சித்துச்சத்து' என்பதில் அவனுடைய எண்குணங் களும் அடங்கும். என்றும் ஒருதன்மைத்தா யிருக்கும்பொரு ளுக்கே தன்வயத்தனுதல் முடியுமாதலின், சத்து என்பது தன்வயத்தனுதலாகிய குணத்தைக் குறிக்கும். தூய உடம்பி னனுதல் முற்றுமுணர்தல், இயற்கை உணர்வு, இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை ஆகிய இந்த ஆறு குணங்களும் சித்தில் (அறிவில்) அடங்கும். சித்தே ஆநந்தத்தை (இன்பத்தை)ப் பயத்தலால் ஆநந்தமும் சித்திலடங்கும். ஆகவே சத்து சித்து ஆநந்தம் (சச்சிதானந் தம்-உண்மை அறிவின்பம்) என்பது முதல்வனுடைய சிறப்பி லக்கணம் என அறிக.

---

# சிவஞான போதம்

## ஆருஞ்சூத்திரம்

உணருரு அசத்தெனின் உணராதின்மையின்
இருதிறன் அல்லது சிவசத்தா மென
இரண்டு வகையின் இசைக்குமன் னுலகே.

Translation By

J. M. NALLASAWMI PILLAI B.A., B.L.

That which is perceived by the senses is *Asat* (Changeable). That which is not so perceived does not exist. God is neither the one nor the other and hence called *Siva Sat* or *Chit Sat* by the wise; *Chit* or *Siva* when not understood by the human intelligence and *Sat* when perceived with divine wisdom.

# அறிவியற் பகுதி-Science

## சிற்ப நூல்

[துடிசைகிழார் அ. சிதம்பரனார் அவர்கள்]

(சிலம்பு கச, பரல் ய, சசுஅ-ம் பக்கத் தொடர்ச்சி)

தற்காலம் நகரத்துச் செட்டியார்கள் செய்யும் திருப்பணிகள் பூராவும் அவர்களுடைய ஏஜண்டுகளாகிய ஆரியப் பிராமணர்களால் நடைபெற்று வருகிறது. ஆகையால், வேலைகள் எப்படி முடியும் என்று எழுதவே வேண்டியதில்லை. இது மிகவும் இரங்கத் தக்கதே.

கோடி கோடியாய் ரூபாய்களைச் செலவழித்துக் கடைசியில் காரியம் பயனில்லாமல் போய்விடுவதை உன்னியே, இதனை எழுத வேண்டுவதாயிற்று.

இனிமேலாகிலும், திருப்பணியாளர்கள் இதனைக் கவனித்து, தாங்கள் நேராகவோ, தங்கள் ஏஜண்டுகளைக் கொண்டோ தூபிகளைச் சீர்திருத்துவார்கள் என்று நம்புகிறேன்.

### தட்சணுமூர்த்தம்

தட்சணுமூர்த்தம் என்பது சிவபெருமானுடைய 64 மூர்த்தங்களில் ஒன்று.

அது பஞ்சகிருத்திய மூர்த்தங்களில் சேர்ந்ததன்று.

சனகர் - சனந்தனர் - சனுதர் - சனற்குமாரர் என்ற நால்வருக்கும் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருளையும் ஆலின்கீழ் உபதேசித்த அவசரம்.

ஆகையால், அந்த உருவத்தை தூல லிங்கமாகிய தூபியின்கண் தெற்கே தெற்கு முகமாகிய அகோரத்துக்குப் பதிலாகப் போட நியாயம் சிறிதும் இல்லை.

யோக தட்சணுமூர்த்தி என்பது மேற்படி நான்கு முனிவர்களுக்கும், ஆகமங்களிற் கூறிய சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நாற்பாதப் பொருளை உபதேசித்த அவசரம்.

இம்மூர்த்தத்தையும் தூபியின் தெற்கே போட இயைபு சிறிதும் இல்லை

வீணுகான தட்சணுமூர்த்தி என்பது தும்புரு - நாரதர் - சுகர் முதலியோருக்கு, வீணை, யாழ் முதலிய கருவிகளைக் கொண்டு இசை ஞானத்தைப் போதித்த அவசரம். ஆகையால் இதனையும் தூபியின்கண் அமைக்கக் காரணம் இல்லை.

559



மேலும், பிரம விஷ்ணுக்கள் மும்மலம் உடையவர்கள். உருத்திரன் இருமலமுடையவர். மகேசர் - சதாசிவர் ஒரு மலமுடையவர்கள்.

ஆகையால், இருமலமுடைய உருத்திரனுடைய இடத்தில் ஒருமலமுடைய மகேசமூர்த்தங்களில் ஒன்றாகிய தட்சணா மூர்த்தியை அமைத்தல் ஒவ்வாத முறையாகும்.

இருதயம் இருக்கவேண்டிய இடத்தில் இருதயமும், நுரையீரல் இருக்கவேண்டிய இடத்தில் நுரையீரலும், கல்லீரல் இருக்கவேண்டிய இடத்தில் கல்லீரலும் இருக்கவேண்டுமே யொழிய ஒன்று இருக்கக்கூடிய இடத்தில் இன்னொன்றை அமைப்பதானால் என்னாகும் என்று உன்னிப் பாருங்கள்.

பிண்டத்தில் உள்ளது அண்டத்தில். மனிதனுடைய உடம்பு "நடமாடுங் கோவில்", ஊரில் இருக்கும் கற்றளி "படமாடுங் கோவில்"; ஆகையால், கோவில்கள் எல்லாம் தத்துவ நூன்முறைப்படி அமையவேண்டும்.

கோவில்களைக் கட்டும் புண்ணியசீலர்கள் தத்துவ நூலும் சிற்பமும் தெரிந்த ஒரு அன்பரைக் கோவில் மேற்பார்வைக்கு வைத்துக் கொண்டால் இந்த மாதிரியான பிசகுகள் நேரா. அவர்கள் சிற்பிகளைக் கொண்டு சரியானபடி தூபியை அமைப்பார்கள்.

தூபிகளில் ஒரு தட்டு உடையனவும், இரண்டு அல்லது மூன்று தட்டுக்களை உடையனவும் உண்டு. (தட்டு = அடுக்குகள்).

ஒரு தட்டு (= அடுக்கு) உள்ள தூபிக்கு வடக்கே வாணியுடன்கூடிய பிரமாவையும், மேற்கே இலக்குமியுடன்கூடிய விண்டுவையும், தெற்கே உமையுடன்கூடிய உருத்திரனையும், கிழக்கே பார்வதியுடன் கூடிய மகேசனையும் அமைக்க வேண்டும்.

இரண்டு தட்டுக்கள் (= அடுக்குகள்) உள்ள தூபிக்கு, அடித்தட்டில் மேலே சொன்ன பிரகாரமும், அதற்கு மேற்றட்டில் மேற்கண்ட பிரமா - விண்டு - உருத்திரன் - மகேசன் இவர்களை இயக்கும் முகங்களாகிய வாமதேவம் - சத்தியோசாதம் - அகோரம் - தற்புருடம் முதலிய முகங்களை அமைக்க வேண்டும்.

மூன்று தட்டுகள் (= அடுக்குகள்) உள்ள தூபியாயிருந்தால், அடித்தட்டிலும் நடுத்தட்டிலும் மேலே கூறிய பிரகாரமும், மூன்றாவதாகிய மேல் தட்டில் ஆதி - இச்சை - ஞானம் - கிரியை என்னும் சத்திகளோடுகூடிய அநாசிருதர் - அநாதர் - அனந்தர் வியோமரூபர் முதலானவர்களை அமைக்கவேண்டும்.

இப்படித் தூபியின்கண் காட்டுவதானது தத்துவ முறைகளை எளிதாக உலகர்களுக்கு எடுத்துக் காட்டுவதாகும்.

பஞ்சகிருத்தியங்களுக்குக் காரணமாகிய தூலமா யிருக்கும் சத்திகளையும் - சூக்குமமாயிருக்கும் சத்திகளையும் - காரணமாய் இருக்கும் சத்திகளையும் - அந்நாளில் பெரியோர்கள், பாமரர்கள் அறிந்து உய்யும் வண்ணம் தூபியின்கண் ஏற்பாடு செய்திருந்தார்கள். அந்த முறைகள் மறைபட்டுப் போகவே, கோவில்களில் அருள் குன்றிவிட்டது. அருள் குன்றவே உலகில் பஞ்சமும், நோய்களும் மிகுதிப்பட்டன.

தற்காலம் தூபி அமைப்பவர்கள் பஞ்சகிருத்திய நுணுக்கங்களைக் காட்டும் உருவங்களை அமைப்பதை விட்டு, தூபியில் தங்கள் மனம் போனவாறு வேடிக்கையான உருவங்களையும், அம்மணமான உருவங்களையும், உருத்திரனுக்குப் பதிலாக தட்சணாமூர்த்தி உருவங்களையும் அமைக்கிறார்கள்.

இது தமிழ் நாடு செய்த பாவம் ஆகும். திருப்பணியாளர்கள் என்று இந்நுணுக்கங்களை மனதிற்கொண்டு தத்துவ நான்முறையை அனுசரிக்க ஆரம்பிக்கின்றார்களோ அன்றே உலகத்துக்கு நல்லகாலம் என்னலாம். ஆனால், அந்நற் காலத்தை எதிர்பார்ப்பதுதான் கஷ்டமாயிருக்கிறது.

உள்ளே இருக்கும் சூக்குமலிங்கமாகிய சிவலிங்கத்தின் தூலதேகமே கோவில்; அத்தூல தேகத்திற்கு முகம்போன்றது தூபி, அத்தூபி வெளிப்படையான முகங்களை யுடையது; ஆகவே சிவலிங்கத்தின் பஞ்சமுகங்களான ஈசானம் - தற்புருடம் - அகோரம் - வாமம் - சத்தியோசாதம் முதலியவைகளால் இயக்கப்படும் பிரமா - விஷ்ணு - உருத்திரன் - மகேசன் - சதாசிவன் இவர்களுடைய உருவங்கள் அத்தூபியில் இருக்கவேண்டும்; உருத்திரனாகிய ஒருமுகம் இல்லாவிட்டால், கடிகாரத்தில் ஒரு சக்கரம் இல்லாவிட்டால் எப்படி மற்றச் சக்கரங்கள் இருந்தும் பலனில்லையோ அப்படியே கோவிலில் தெய்வ சாந்நித்தியம் இராது என்று ஒவ்வொருவரும் உணர்வார்களானால் எல்லாம் சரிவர நடக்கும்.

இனிமேலாவது திருப்பணியாளர்களும் தமிழ்நாட்டிலுள்ள சைவர்களும் ஏனையோரும் இக்குற்றத்தை உணர்ந்து சீர்திருத்த முன்வருவார்களென்று நம்புகிறேன்.

தூபி வேறு - கோபுரம் வேறு. கோபுரம் என்பது ஆவரணங்களில் நாற்பக்கத்தும் உள்ளது.

கோபுரத்தில் ஆதாரம் - நிராதாரம் - மீதானம் முதலாகிய நிலைகளையும், அண்டங்களின் அடுக்குகளையும், அண்டங்களிலுள்ள புவனங்களையும், அப்புவனங்களுக்கு உள்ள நாயகி நாயகர்களையும் அமைத்துக் காட்டவேண்டும்.

561

# செய்திகளும் குறிப்புகளும்:
# News and Notes

எளியவனை வலியவன் தாக்குங்கால் விரைந்து முன்னவனுக்கு உதவுவதுபோல் போக்குக் காட்டி மெள்ள மெள்ள நழுவி வலியவன் பக்கம் சேர்ந்துகொள்ள முயல்வது தற்கால அரசியல் தந்திரம் போலும்! "சர்வதேச சங்கம்" ஜெனீவாவில் கூட்டங்கூடி ஒத்துப் பேசி ஏழையான அபிஸீனிய மன்னரைக் கைவிட்டதும் அரசியல் தந்திரமே!!

* * *

திவான்பகதூர் ஏ. இராமசாமி முதலியார் அவர்கள் பி.ஏ., பி.எல்., பாராளுமன்றத்தைச் சேர்ந்த இந்தியா கவுன்ஸில் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பதவி ஏற்றுச் சென்றமை தமிழ் நாட்டார்க்குப் பெருமை யளிக்கத்தக்க தொன்றாகும். அரசியலலுவற்றுறையில் வேலைபார்க்காமல் பொதுநல உழைப்பாளியாகவே இருந்து தொண்டாற்றி வந்த இந்தியர் ஒருவர் இப் பெரும்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டது இதுவே முதன் முறையாகும். ஏற்ற பதவியில் ஏற்றமுற்றுத் திரு. முதலியார் அவர்கள் திகழ்வார்கள் என்பது மறுக்கொணாததோர் உண்மையாகும்.

* * *

தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், மலையாளம் முதலிய மொழிகளில் தேர்ச்சியுற்று சென்னைப் பல்கலைக் கழகத்தில் எம்.ஏ., எல்.டி., பட்டம்பெற்றுச் சென்னைக் கிறித்துவ கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பல ஆண்டுகள் உழைத்து வந்தவர் உயர் திரு. எஸ். அனவரத விநாயகம் பிள்ளை அவர்களாகும் (முகப்புப் படம் பார்க்க). கல்லூரியிலிருந்து விலகி ஏழாண்டுகள்வரைத் தமிழ்ப் பேரகராதிக் கழகத்தில் தனிப்பட்ட முறையில் பேருழைப் புழைத்துப் பெருந்தொண்டாற்றியபின் இப்பெரியாரவர்கள் கொழும்புக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகச் சிறிதுகாலம் உழைத்து வந்தார்கள்; அதன்பின் சென்னைப் பல்கலைக் கழகத் திராவிட மொழி யாராய்ச்சிக் கழகத்தைச் சேர்ந்த தமிழ்ப் பேராசிரியராக ஆறு ஆண்டுகள் வரையிருந்து வந்தார்கள். இவர்கள் இயற்றிய நூற்கள் பற்பல. இவ்வாண்டு ஜூலைத் திங்கள் முதல்நாள்தொட்டு இவர்கள் அலுவலிலிருந்து ஓய்வு பெற்றுக் கொண்டார்கள். எல்லாம்வல்ல இறைவன் இவர்களுக்கு நீண்ட ஆயுளையும் உடல்நலத்தையுங் கொடுத்து இன்னுந் தமிழ்ப்பணி யாற்றுமாறு உளங்கொள்ள வேண்டுகிறோம்.

———

# மதிப்புரை

நவசக்தி :—பெயரைக் கேட்ட அளவானேயே இஃது உயர்திரு. திரு. வி. கலியாணசுந்தரனார் அவர்கள் வெளியிடும் வாரத்தாளாகத் தானிருக்கவேண்டும் என்பதை அன்பர்கள் தெரிந்துகொண்டிருப்பார்கள். தெள்ளிய தமிழ் நடையில் இலக்கியச் செறிவுடன் வெளிவரும் இத்தாளின் முதல் மூன்று இதழ்கள் வரப்பெற்றேம். வழக்கம்போல் எல்லா நயங்களும் பொருந்தியதாயும் திரு. முதலியாரவர்களின் தனிச்சிறப்பு தெரிப்பதாயும் இத்தாள் விளங்குகின்றது. அழகிய இவ்வாரத்தாள் பல்லாற்ருனும் பெருகித் திரு. முதலியாரவர்கள் கொண்ட நோக்கத்தை நிறைவேற்றுவிக்குமென நம்புகிறேம். தமிழ்த் தாளுலகில் நவசக்தியின் வரவு நல்வரவாகுக!

திருப்புகழமிர்தம்:—திங்கள் தோறும் மலரும் இவ்வழகிய தமிழ்மலரின் முதலிரண்டு இதழ்களும் வரப்பெற்றேம். வடமொழி தென்மொழியாகிய இருமொழிக் கடலினுந் தேக்கித் திளைத்த பெருஞ்சொற் கொண்டல் காங்கேய நல்லூர் குகஸ்ரீ கிருபாநந்தவாரி அவர்கள் இவ்வெளியீட்டின் ஆசிரியராவார்கள். இவ் வெளியீட்டின் ஒவ்வோரிதழிலும் ஒவ்வொரு திருப்புகழ்ப் பதிகத்திற்குப் பதவுரை, பொழிப்புரை, விரிவுரை, கருத்துரை ஆகிய இவை தக்க மேற்கோள்களுடன் வெளிவருகின்றன. இன்னும் கற்ருர்ப்பிணிக்குங் கருத்துகள் பொதுளும் பிறகட்டுரைகளுங் காணப்படுகின்றன.

இதன் ஆண்டுக்கட்டணம் ரூ. 1 தான். வேண்டுவோர் "திருப்புகழமிர்தம்" ஆபீஸ் 2-7 ஐயாமுதலி தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை என்ற முகவரிக்கு எழுதிக்கொள்க.

திருப்பேரூர் தலச்சிறப்பும், ஸ்ரீ ஆனந்த நடராசர் திருநடனக் காட்சியும் :—அழகிய இச்சிறுநூல் கோவை. திரு. சி. கு. நாராயணசாமி முதலியார் அவர்களால் தொகுத்தெழுதப்பட்டது. கோயமுத்தூரை அடுத்துமேற்பால் மூன்றுவது கல்லிலிருக்கும் திருப்பேரூர் என்ற பதியின் ஊர், புனல், உரு ஆகிய மூன்றின் பெருமைகள் இச்சிறு நூலின்கண் மிக அழகாக எடுத்துரைக்கப்பட்டிருக்கின்றன. ஓரூரின் பண்டைப் பெருமைகளையும் ஆராய்ச்சிக் குறிப்புகளையும் ஆய்ந்தறிந்து எடுத்துவிளக்கும் ஆற்றல்வாய்ந்தவர்கள் இக்காலத்தில் ஒருசிலரே தமிழ்நாட்டிலுள்ளார்கள். அவர்களில் இச்சிறுநூல் தொகுத்தியற்றிய திரு. சி. கு. நாராயணசாமி முதலியா

ரவர்களும் ஒருவராவர். இப்பெரியாரின் கல்வியறிவும் ஆராய்ச்சிப்புலனும் இந்நூலைப் படித்தோர்க்கே நன்கு புலனுகும். பலர்க்கும்பயன்படும் இச்சிறு நூலின் விலை அணு ஒன்றுதான்.

அவிநாசித் திருத்தலச் சிறப்பு:—90 பக்கங்கள்கொண்ட இவ்வழகிய நூலும் திரு. சி. கு. நாராயணசாமி முதலியாரவர்கள் இயற்றியதே. இதன் விலை அணு 6.

வழக்கம்போல் திரு. முதலியாரவர்கள் மிக அரிதின் ஆராய்ந்து பல அருமையான பொருள்களைத் திரட்டி இதன்கண் தொகுத்துக் கூறியுள்ளார்கள். கொங்குநாட்டு அமைப்புக்களும், அவிநாசிப் பதிச்சிறப்புக்களும், ஆராய்ச்சிக் குறிப்புக்களும் இதன்கண் நன்கு விளக்கப்பட்டுள்ளன. சைவசீலரும் செந்தமிழ்ச் செல்வருமாகிய திரு. முதலியாரவர்கள் இதைப் போன்ற இன்னும் பலசிறந்த நூல்களை வெளியிட்டுத் தமிழருக்குதவுமாறு வேண்டுகிருேம்.

முருகமணி மாலை: (விலை அணு 2) திருப்பரங் குன்றத்துறை முருகப்பெருமான்மீது மதுரை மதுரஞ் சுந்தரபாண்டியனுர் பாடிய பாடல்கள் இந்நூலின்கண் தொகுத் தச்சிடப்பட்டுள்ளன. இவ்வாசிரியர் எவ்வாறு தமிழ்ச்செய்யுள்கள் பாடி திருப்பரங்குன்றத்தில் மழைபெய்வித்து மாண்புற்ருர் என்பது நம் "செல்வி" யன்பர்கள் நன்கறிந்ததே யாகும். உயர்ந்த நீதிகள் தெரிக்கும் இந்நூல் ஒவ்வொரு தமிழரும் கற்றற் குரியதே.

உமர் கய்யாம்: தமிழ் மொழிபெயர்ப்புநூல்: திரு. வி. எம். ஷம்சுத்தீன் சாஹிப் அவர்களும் திரு. வி. எஸ். அருளானந்தம் அவர்களும் மொழி பெயர்த்தது. இரண்டு பாகங்கள்: 107 பக்கங்கள். விலை ரூ 1. கிடைக்குமிடம்:—வ. மி. ஷம்சுத்தீன் சாஹிப், டீன்ஸ்மன்ஜில், ஸ்ரீவைகுண்டம்.

பாரசீக நாட்டுத் தத்துவஞானியாகிய உமர்கய்யாம் எழுதிய "ருபாயியாத்" என்ற நூலை எட்வர்ட் பிட்ஸ்ஜெரால்டு என்பவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். ஆங்கிலத்திலுள்ள அந்நூலின் தமிழ்மொழி பெயர்ப்பாகவே இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது.

கலைவல்லன்: ஆசிரியர், ஆர். வி. ராமசுவாமி, 'பார்வதி விலாஸ்', எக்ஸ்டென்ஷன், சேலம். 178 பக்கங்கள் விலை அணு 12.

அழகிய இந்நூல் ஒரு புதுக்கதையாகும். நல்ல கருத்துக்களும், இனிய நீதிகளும், பற்பல மேற்கோள்களும் இந்நூலில் நிறைந்துள்ளன. சுவைக்குதவாக் கட்டுக்கதைகளைப் படித்து வீண்காலம்

போக்குவதில் விருப்பமில்லாதவர்கள் வாங்கிப்படித்துப் பயன் பெறத்தக்க நூலாகும் இது.

**திருக்கயிலாய ஞானவுலா:** பிரசங்க பூஷணம் பு. பா. இரத்தின சபாபதி நாயகர் அவர்களியற்றிய விருத்தியுரையுடன் கூடியது. திரு. பா. ல. முருகேச நாயகர் பதிப்பு. விலை அணு 8. கிடைக்குமிடம்: அ. ப. எல்லப்ப நாயகர், அமைச்சர், 11. அல்லூர் வேங்கடாத்திரி மந்திரம், கொல்லவார் அக்ரகாரம், பழைய வண்ணாரப் பேட்டை, சென்னை.

"மொழிவளர்ச்சிப் பெயரெழுப்பி முடங்கி, சமயவளர்ச்சிக் குரலெடுத்து ஒடிந்து, உள்ளத்தில் செம்மையின்மையும் அம்மம்ம! தெய்வ நிந்தையுமாக இருந்து மேடைமேல் மட்டும் என்னே இவர் சமயப்பற்று, என்னே இவர் மொழிப்பற்று எனப் பிறர் மதிக்குமாறு வெற்றுக்குப் பேசும் திறத்திற் சாய்ந்து முடியும் பொல்லா நெறியில் போகாமல் சாந்திபெறச் சமயக்கண்சார்க என்பது பண்டைக்காலச் செய்தி." ஆகவே அதுவே நோக்கமாகக் கொண்டு உழைத்ததன் பயனே இவ் வுரை நூலாகும்.

தமிழிலக்கிய வகைகளில் 96 பிரபந்தங்கள் என ஒருவகையுண்டு. அவ்வகையைச் சேர்ந்ததே உலா என்பது. அது தலைமகன் ஒருவன் உலாப்போகின்ற சிறப்பைப் பேதை முதலிய எழுவகைப் பருவ மாதர் பெருமைப்பட விளக்கிக் கலிவெண்பாவாற் பாடுவதாகும். இதனையே அடிப்படையாக் கொண்டு பரம்பொருள் பவனி வருவதாகவும் உயிர்களாகிய பெண்கள் அவன் அருமை பெருமைகளை எடுத்து விளக்கிக் கூறுவதாகவும் அமைக்கப்பெற்றதே திருக்கயிலாய ஞானவுலாவாகும்.

சைவசமய குரவர்களில் ஒருவரான சுந்தரருடன் இருந்த சேரமான் பெருமாள் என்ற அரசர்கோன் பாடியது இவ்வுலா. நடையிலும் பொருளிலும் சிறந்து பண்டைப்பெருமையுடையதாய் விளங்கும் சைவநூலாகிய இதற்கு இதுவரை ஒரு விருத்தியுரை யில்லாதிருந்தது பெருங்குறையாகும். அக்குறையை மிகவுந்தேர்ந்த முறையில் நீக்க முன்வந்த பிரசங்க பூஷணம் பு. பா. இரத்தின சபாபதி நாயகர் அவர்களை நாம் பாராட்டுகிறோம். அகப்பொருள் நுட்பங்கள் பல்லாற்றானும் விளங்குவதாய்த் தகுந்த மேற்கோள்களுடன் மிகவும் திருந்திய முறையில் தூய எளிய தமிழ்நடையில் திரு நாயகர் அவர்கள் உரை எழுதியுள்ளமை வியந்து பாராட்டற்குரியதாகும். இன்னும் பல நூல்களுக்கும் இவ்வாறே அன்னார் உரையெழுதி யுதவவேண்டுமென்பதே எம் பேரவாவாகும்.

---

566



மு. சி. பூர்ணலிங்கம் பிள்ளை, பி.ஏ., எல்.டி.